
சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும்
மாத இதழ்.

**MOTHLY MAGAZINE OF SAIVAISM**

**APRIL MAY 1999.**

# சைவநீதி
# SAIVANEETHI





ரூபா 30/-

பிரமாதி சித்திரை

## ஆண்டு மலர்

J.B- 6873

## 2 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா நிகழ்வுகள்















# சைவநீதி

## மூன்றாவது ஆண்டின் முதலிதழ்


சைவ சமய வளர்ச்சி கருதிய மாத இதழ்

திருச்சிற்றம்பலம்

*மூன்று மூர்த்தியு ணின்றய லுந்தொழில்*
*மூன்று மாயின மூவிலைச் சூலத்தன்*
*மூன்று கண்ணினன் தீத்தொழில் மூன்றினன்*
*மூன்று போதுமென் சிந்தையுண் மூழ்குவே.*

திருச்சிற்றம்பலம்





# ஆண்டு மலர்

## 1999 ஏப்ரல் மே

உ

சிவமயம்

# சைவநீதி

## பொருளடக்கம் :


1. வாழ்த்துரை 1
2. பக்திநெறி பரப்பி வாழி.
   – கண்டாவளைக் கவிராயர் ........ 8
3. யார் எனக்கு உறவு.
   – ஆசிரியர் ........ 9
4. என்னிலும் இனியன்
   – பண்டிதர் ச. சுப்பிரமணியம் ........ 10
5. கோமாதா
   – சைவப்புலவர் சு. செல்லத்துரை ........13
6. தமிழ் அன்பு சிவம்.
   – சைவப் புலவர் திருமதி. இ. அப்புத்துரை ........ 16
7. சித்திரையில் முத்திரை பதித்த சித்திரம்.
   – முருக வே. பரமநாதன் ........ 17
8. சிறுத் தொண்ட நாயனார்.
   – சிவ சண்முக வடிவேல் ........ 23
9. நவக்கிரக வழிபாடு நலிவை அகற்றுமா.
   – சித்தாந்த ரத்தினம் க. கணேசலிங்கம் ........ 26
10. மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆனவன்.
   – பண்டிதர் சி. அப்புத்துரை ........ 29
11. சிவனடியார் சீர்பரவுவார்.
   – சைவப் புலவர் பொன் தெய்வேந்திரம் ........ 31
12. வன்னிப்பிரதேசச் சைவாலய வழிபாட்டு மரபு.
   – முல்லை மணி ........ 34
13. முதலாஞ் சைவ வினாவிடை - விபூதி இயல்
   – ஆறுமுக நாவலர் ........ 37
14. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் - 1, 2, 3 ஆந் திருமுறை ........ 38
15. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். - 4, 5, 6 ஆந் திருமுறை ........ 41
16. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். - 7 ஆந்திருமுறை ........ 44
17. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம். - 8 ஆந் திருமுறை ........ 45
18. பூந்துருத்தி நம்பி காட நம்பி திருவிசைப்பா - 9 ஆந் திருமுறை ........ 47
19.. சேந்தனர் திருப்பல்லாண்டு. - 9 ஆந் திருமுறை ........ 48
20 திருமூலர் திருமந்திரம் - 10 ஆந் திருமுறை ........ 48
21. காரைக்காலம்மையார் பாடியது - 11 ஆந் திருமுறை ........ 49
22. சேக்கிழார் அருளிய பெரியபுரணம் - 12 ஆந் திருமுறை ........ 31
23 நினைவிற் கொள்வதற்கு - ........ 50


சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக்
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர் – இதழ் நிர்வாகிகள்.

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீன முதல்வர்

*சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள்*

## வாழ்த்துரை

சைவசமய வளர்ச்சி கருதிய மாத இதழாகிய சைவநீதி இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து விழாக் காணும் இந்த வேளையில் அதனை வாழ்த்துவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவசமயத்தை வளர்க்க வேண்டுமா? அது என்றோ பூரண வளர்ச்சி கண்ட, முடிந்த முடிபான சமயமல்லவா! என்ற எண்ணம் அநேகர் உள்ளங்களில் எழுவது இயல்பு. ஆதியும் ஆந்தமும் இல்லாத எம் முன்னைப் பழம்பெருட்கும் முன்னைப் பழம்பெருளாயும் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப் பெற்றியனாயும் விளங்கும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாய்க் கொண்ட சைவமசயம் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வளம் பெற வேண்டும். என்னும் நோக்குடன் சைவநீதி மலர்வது போற்றுதற்குரியது.

சிறுவர் முதற் பெரியர் ஈறாகச் சகல மட்டத்தினர்க்கும் பயன் தரக்கூடிய வகையிற் சைவ சமயத் தலங்கள், வாழ்வியல் முறைகள், வழிபாட்டு முறைகள். சிறுவர்க்கான சிந்தனைகள் என, பல்வேறு விடயங்கள் சைவநீதியில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

சமய நெறிமுறைகள் குழப்பமடைந்து, ஆடம்பர வாழ்வு வாழ்வதே சமய வாழ்வு என்ற சலனம் நிரம்பிய உலோகாயத நோக்கில் சைவம் தத்தளித்து நிற்பதைக் காணகிறோம். இதனால் மக்கள் அமைதியின்றி அல்லற் படுவதையும் மதங்கள் முட்டி போதிக் கொள்வதையும் காணமுடிகின்றது.

ஆன்ம ஈடேற்றத்தை முதலாக வைத்துச் சைவசமய வாழ்வே உலகில் உண்மையான அமைதியைத் தரவல்லது. அதுவே வாழ்வின் உண்மைப் பயன்; முத்தியின் வழியுமாகும். எனும் சைவசிந்தாந்த நெறியை மக்கள் உள்ளத்தில் வளர்க்கும் பணியிற் "சைவநீதி" உறுதியுடன் மேலும் மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

*மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*

**1999.04.19**

சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை 609803.

ஆதீன கர்த்தர் அவர்கள்

(நாகை மாவட்டம்)

திருவாவடுதுறை ஆதீனம்

நாள் 02.04.99.

"நமச்சிவாய வா அழ்க நாதன்தாள் வாழ்க
இமைபொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

# "வாழ்த்துரை"

மேன்மை கொள் சைவ சமய வளர்ச்சி கருதிக் கொழும்பிலிருந்து வெளிவரும் 'சைவநீதி' திங்கள் இதழ் தன் உயர் பணியில் இரண்டு ஆண்டுகளை இனிது நிறைவு செய்து அண்மையில் மூன்றாம் ஆண்டுப் பணியினை மகிழ்வொடு தொடங்கவுள்ளமை அறிய மகிழ்ச்சி.

சிவநெறியின் கோட்பாடுகளும் ஒழுகலாறுகளும் யாவரும் எளிதின் தெரிந்து நலம் பெறும் வண்ணம் முறையில் நின்று பணியாற்றிச் சிறக்கும் 'சைவநீதி' இதழ் வரும் ஆண்டுகளில் மேலும் உயர்பயன் விளைத்துப் பொலிவுறவும், ஆண்டு மலர் சிறந்த படைப்புகளொடு சிவமணம் கமழ மலர்ந்து இன்பம் பெருக்கவும் அருள அருள்தரு ஞான மாநடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

அருளாணையின் வண்ணம்

சுந்தரமூர்த்தித்தம்பிரான்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர் : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி : 24018

நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை

அன்பே சிவம்

29.03.1999

## அருளாசிச் செய்தி

*சிவநேயச் செல்வர்களே*

ஒவ்வொரு மாதமும் வெளிவரும் சைவநீதி மூன்றாவது வருடத்தில் காலடி எடுத்து வைப்பதை அறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றோம். மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்பது சைவநீதி. அந்நீதி இன்று உலகளாவிய ரீதியிற் செயற்படுவதைக் கண்ணாரக் கண்டு மனதார அனுபவிக்கிறோம். அவ்வகையிற் கொழும்பில் வெளியாகும் சைவநீதி சஞ்சிகை கொழும்புவாழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகம் முழுதும் வாழ் சைவமக்களுக்குப் பயனுள்ளதாகவும் அறிவைத்தூண்டிச் செயற்படக்கூடிய கட்டுரைகளைத் தாங்கியதாகவும் அமைந்து வருவது வரவேற்கத்தக்கதாகும். மேலும் சமயக் கருத்துக்களை இளைய தலைமுறையினர் புரிந்து கொள்ளும் முறையில் செயற்படுவது மனதுக்கு நிறைவை தருகின்றது. நூலாசிரியரது ஆளுமையும் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுகின்ற திறமையும் மேலும் வளர்ச்சியடையவும் மலரை எல்லா மக்களும் ஏற்றுச் சமயக் கருத்தைப் புரிந்து வாழவும் இன்னும் பல்லாண்டுகாலம் சைவநீதி வளர்ந்து தொண்டு செய்யவும் பிரார்த்திக்கின்றோம்.

*'ஞாலம் நின்புகழே ஆகவேண்டும்*

*ஆலவாய் உறை எம் அண்ணலே'*

*என்றும் வேண்டு பின்ப அன்பு'*

*ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்.*

தொலைபேசி : 807995
கயிலை மா முனிவர் வித்துவான்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010 தமிழ்நாடு

உறுப்பினர்
தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக்குழு

தலைவர்
தமிழ்நாடு துறவியர் பேரவை

TELEPHONE : 807995
Kailai - Ma - Munivar Vidwan
**SANTHALINGA RAMASAMY ADIGAL**
PERURATHEENAM, PERUR (P.O.)
COIMBATORE - 641 010 TAMILNADU

Member
Tamilnadu Temple Advisory Committee

President
Tamilnadu Saints Association


சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

நாள்.........................

# வாழ்த்து

உலகெலாம் பரந்துநின்ற சைவத்தின் உயர்வை மக்கள்
நலம்பெற எடுத்துச் சொல்லி நற்றமிழ் நூல்களாலே
பலரும் போற்றிடும் பண்பாட்டை நீதியைப் பரப்பி நாளும்
மலர்கொண்டு போற்ற வாழும் வழிகூறும் மரபு வாழி.

திருமுறைப் பாடலாலே தெய்வத்தைப் போற்றி லங்கை
மருவிடும் அன்பர் "சைவ நீதியாம்" இதழால் மக்கள்
உருகுநற் சிந்தையோடு உலகெலாம் வாழப் பண்பால்
தருசெய்தி இதழ்சிறந்து தமிழினம் தழைத்து வாழி.

அயல்நெறி மாற்றி நந்தமிழ் அருந்தமிழ் மரபு பேணும்
செயல்திரு முறையினாலே சிறக்கும் அந்நெறியைக் கோயில்
நியமங்கட் குரியதாக்கி நீர்கொண்டு மலர்கொண் டேத்தி
மயல்அறச் சைவநீதி மணம்பரப்பு இதழாய் வாழி

இலங்கைத் தமிழ் மக்கள் சிவநெறிபேணும்
சிந்தையர் - மக்களுக்குள்ள துயர் நீங்கிச்
சிவநெறி பரவ வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள
சாந்தலிங்கஇராமசாமியடிகள்

## இலங்கை மெய்கண்டார் ஆதீன பரிபாலனத் தலைவர் ஞானசிரோன்மணி, சைவப் புலவர்மணி, வித்துவான் திரு. வ. செல்லையா அவர்களின்

# ஆசியுரை

"மனிதர்க்கு வயது நூறு ஆவதில்லை" என்று கூறுகிறது ஒரு பழந்தமிழ்ப் பாடல். சோதிட நூல்வல்லார் திசா புத்திகளைக் கணக்கில் வைத்துப் பூரண ஆயுள் நூற்றி இருபதென்பர். எங்ஙனமாயினும் நாள் ஒன்று போல் கூட்டி உயிர் ஈரும் வாள் ஆவதை நாம் எவரும், அறிந்திலோம். ஆகவே நாளை வீண்நாள்படாதொழுகுதலே நாம் செய்யத்தக்கதொன்றாக அமைகிறது. இங்ஙனம் எம்வாழ்வு அமைவதற்கு நல்லார் இணக்கம் வேண்டும். ஆண்டவன் பூசையில் நேசம் வேண்டும். ஞானம் வேண்டும். இவை கைகூட நாம் உய்ந்தோம். உய்தலே நம் வழியாகவும் அமைய வேண்டும்.

நல்லார் இணக்கத்தைக் கூட வைக்கவும், ஆண்டவன் பூசையில் நேசத்தை ஆக்கி வைக்கவும், ஞானப்பயிற்சியை உண்டாக்கித் தந்துதவக் கூ டிய சாதனமாக விளங்குகிறது சைவ நீதியென்ற சைவசமய மாத இதழ். இதில் பலநூற் பயிற்சி பெற்ற சான்றோரைத் தரிசிக்கலாம். அவர்கள் கருத்துக்களை மனங் கொண்டு கண்டறியலாம். ஆண்டவன் பூசைகள் வழிபாடுகளை நேரிற் காண்பதுபோல் கண்டுகளிக்கலாம். இவற்றின் பேற்றால் ஞானசாதனையும் இதமாய் அமையும் என்பது உறுதி. இவற்றை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை. உலகமே இவ்வுண்மையை உரைக்கிறது. நாம் பார்க்க முடிகிறது. இங்கு நான்குறிப்பிடுவது "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே". அஃதாவது கற்றறிந்த பெரியோரையாகும். அப்பெரியோரை மாதாந்தம் தரிசிக்க வைக்கும். அவர் கருத்தை மனங் கொண்டு உய்ய வைக்கும் சாதனமாய் அமைந்த சைவநீதியை நாம் ஒவ்வொருவரும் மாதா மாதம் தரிசிக்க வேண்டும். அதனைப் பார்த்த மாத்திரத்தில் அதனைக் கரங் கூப்பி மனங் கொண்டு வணங்கும் பெற்றியை நீங்கள் அறிவீர்கள். இதழின் அட்டையின் உள்ளும் புறமும் தெய்வங்களின் வனப்பான காட்சிகள். உள்ளுக்குச் சென்றால் தேன் சொட்டுங் கருத்தோவியங்கள். என்ன அங்குண்டென்பதுபோய் அங்கு என்ன இல்லை; அனைத்தும் பெறலாம் என்ற எண்ணம் பெறலாம் என்பது பெறப்படும். இன்றும் நான் ஒரு மாணவனாயே இருக்கிறேன். படிப்பில் நாட்டம்; படித்துக் கொண்டேயிருக்கிறேன். சைவநீதியிற் புதுப்புதுக்கருத்துக்களைப் படித்து என் சிற்றறிவோடு சேர்த்துக் கொண்டேயிக்கிறேன். பொய்யல்ல – புழுகல்ல – உண்மை. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உண்மையையும் இங்கு உரைக்கிறேன். நீவிரும் அறிவீராக.

சைவநீதிக்கு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. சென்றாண்டில் நெருப்பிற் கருகிப் பல இடர்பாடுகளைக் கடந்து வந்து இவ்வாண்டில் வெகுசிறப்பாகக் கொழும்பு நகர சைவ ஆலயங்களின் பேருதவியாக சிறப்பு இதழ்களும் விரிந்து செவ்வனே மலர்கின்றது மலர். இம்மலரின் தேனை நாம் அனைவரும் சேர்ந்துண்டு மகிழ வேண்டுகிறேன். நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின் பற்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முன்னிற்கும் சைவநீதி சைவ உலகின் தேவையைப் பூர்த்தி செய்து நன்மதிப்போடு பல்லாண்டு பல்லாண்டுகள் தன் சேவையில் மிளிர எல்லாம் வல்ல ஆண்டவன் அருளை வேண்டி மெய்கண்டார் ஆதினச் சார்பாக ஆசி கூறுகிறேன்.

வ. செல்லையா

# பக்திநெறி சைவநீதி பரப்பி வாழி

- கண்டாவளைக் கவிராயர் -

ஆய்வார்சை வநீதிநூல்கள் அருங்க ருத்தை
ஆய்ந்தறிந்தே யதனுண்மை அறியத் தந்து
காய்வார்தம் சிந்தையழுக் கெலாம்க ளைந்தே
கருணைவெள்ள மாக்கிமேலாம் கடவுட் பக்தி

தேய்வாருள் மிகத்தெளிய வைத்தே தாமும்
சின்மயமாய்த் திருவருளிற் திளைத்து நாளும்
தோய்வார ருட்கடலுட் சைவ நீதி
துலக்காசி ரியபீடத் தொண்ட ராமே

இருள்மிகுமிவ் வாழ்விலண்டி இடர்ப டுத்து
இகல்மலத்தின் கொடுமையினை இரித்து நல்ல
அருள்மிகுந்த தெய்வசிந்தை அனைவ ருள்ளும்
அனுதினமும் வளர்ந்தோங்கி அண்ட அன்புப்
பொருள்மிகுந்த தத்வவுண்மை புரியு மாறு
புகட்டியவர் எண்ணங்கள் புனித மாக்கி
மருளினைத்தெ ருட்டியோட்டிச் சைவ நீதி
மாதசஞ்சிகை மனுக்குலம் காக்கும் நாளே

சிவநெறியும் தமிழ்நெறியும் ஓங்கி வாழச்
சீருலகின் மணிவிளக்கா யகிம்சை யென்னும்
தவநெறியாம் அருள்நெறியை அள்ளி யூட்டித்
தானதர்ம அன்புள்ளம் தழைக்க நின்றே
பவக்கடலைக் கடந்தான்மா பரனை நாடில்
பக்தியொடு தொழுதேத்திப் பயனைக் காணப்
பவனிவரு சஞ்சிகையாம் சைவ நீதி
பைந்தமிழும் பத்திமையும் பரப்பி வாழி.

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 3 பிரமாதி சித்திரை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் · இதழ் 1

கெளரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

பதிப்பாசிரியர்
பொ. விமலேந்திரன்

## யார் எனக்கு உறவு

எமக்கு எப்பொழுதும் உதவி தேவைப்படுகிறது. உறவினர்களாக இருந்தால் தாமாக வந்து உதவுவார்கள் என்று நினைக்கின்றோம். அது கூட எக்காலமும் அமைவதில்லை. "செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை என்பார் அப்பரடிகள். எவரையும் நாடாதவர்கள் துறவியர். ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல பெண்டிர், பிள்ளை, சதமல்ல நின்தாள் சதம் கச்சியேகம்பனே என்று இறைவனைத் திருவடியைப் பற்றியவர் பட்டினத்தடிகள்.

அவன் அருள் இல்லையென்றால் எதுவும் நிகழாது. அவனை வணங்குவதற்கும் அவன் அருள் வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பது சிவபுராணம். திருவருள் கூட்டச் "சைவநீதி" என்றொரு மாத இதழ் இரண்டு வருடங்கள் வெளிவந்து மூன்றாவதாண்டில் அடியெடுத்து வைக்கிறது. சான்றோர்களின் கருத்தோவியங்களைத் தாங்கிவரும் இவ்விதழின் வளர்ச்சிக்கு ஆலய அறங்காவலர்களும், அன்பு வாசகர்களும் காட்டும் ஆர்வம் பெரிதும் உதவியுள்ளது. இவ்வண்ணம் எம்பெருமான் திருக்கருனை அவனருள் அடியார் மூலம் வெளிப்படுகிறது.

அவன் அருளவில்லையென்றால் யாருமே அபயமளிக்க முடியாது. "அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சே லென்பார் ஆரிங்கு" என்பர் மாணிக்கவாசகர்.

எனக்கு யாரும் உறவில்லை அஞ்சாதே என்று எனக்கு அபயம் அளிக்க வேண்டும் தேவ தேவா.

*கங்கைவார் சடை யாய் கண நாதா*
*காலகாலனே காமனுக்கனலே*
*பொங்குமா கடல் விடமிடற்றானே*
*பூதநாதனே புண்ணியா புனிதா*
*செங்கண்மால்விடை யாய்தெளி தேனே*
*தீர்த்தனேதிரு வாவடு துறையுள்*
*அங்கணா வெனை யஞ்சலென் றருளா*
*யாரெனக்குற வமரர்க ளேறே*

சுந்தர்.

# என்னிலும் இனியான்

- இயற்றமிழ் வித்தகர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் -

நம்மிடையே அன்பு நெறியையும் நாடெங்கும் சிவனருள் நெறியையும் வளர்த்து வாழ் முதலாகவும் வழித்துணையாகவும் வந்து வளம் பெருக்கிய அருள் வள்ளல்கள் நால்வர் அன்று அவர்கள் வாழ்ந்து காட்டினர். இன்றும் என்றும் அவர்கள் இயம்பிய அருள்வாக்காகிய அருட்பாக்கள் திசையறி கருவியேபோல நின்று நெறிபபடுத்துவன. செந்நெறி சேர்ப்பனவாம்.

நால்வருள்ளும் காலத்தாலும் தொண்டு நெறிகாட்டும் தூய ஒழுகலாற்றாலும் மற்றும் பல பலவகையாலும் முன்னெண்ண நிற்பவர் அப்பர் சுவாமிகளெனல் வழுவாகாது. அருண மொழித்தேவர், தொண்டர் சீர்பரவுவார் எனப்பாராட்டப்பெறும் சேக்கிழார் சுவாமிகள் அப்பரை நமக்கு நிழற்படமாக அமைத்துக் காட்டும் காட்சிமூலம் கண்டு கொண்டபின், அப்பர் சுவாமியைக் கண்டு காட்டும் வண்ணத்தையும் காண்பாம்.

திருநாவுக்கரசராகிய அப்பர் பிறந்தநாடு திருமுனைப்பாடிநாடு. ஊர் திருவாமூர்; தந்தை புகழனார்; தாய் மாதினியார்; தமக்கை திலகவதியார். பிள்ளைத்திருநாமம் மருணீக்கியார். இளமையிலே தாய் தந்தையரையும் தமக்கையாருக்கு நிச்சயித்திருந்த வரனையும் இழந்தமையால் நிலையாமை கண்டு பற்றுகளை அறத்துறந்தார். அமைந்த செல்வம் அனை த்தையும் சிவதர்மங்களிற் செலுத்தினார்.

முன்செய்த தவக் குறையாற் பிறப்பொழிக்க உகந்த பெருநெறி சமணம் எனக்கருதி அந்நெறி சேர்ந்து அறிவு மிகுதியால் தருமசேன ரெனும் நாமம் பெற்றுத் தலைமைச் சமண்குரவராய் விளங்கினார்.

தம்பியார் உளராக வேண்டுமெனும் தயவால் தபோதனியாராகித் தவம் புரிந்து வரும் திலகவதியார் திருவதிகைச் சிவனுக்குத் தொண்டு பூண்டு தம்பியைச் சமணீக்கிச் சைவத்தில் சார்விக்கும்படி வேண்டி நின்றார். இறைவன் இரங்கிச் சூலை நோய் மூலம் தம்பியைத் தடுத்தாண்டார்.

திருநீறணிந்து சைவராகிக், "கூற்றாயினவாறு" எனும் பதிகம் பாடிச் சூலையும் தீர்ந்து சிவபிரானாலே திருநாவுக்கரசு எனும் நாமமும் சூடப்பெற்றார்.

அதனால் கொதிக்தெழுந்த சமணரின் சூழ்ச்சியாலே பல்லவவேந்தன் பணிக்க, தண்டலாளர் நீற்றறையிலிட்டும், நஞ்சுகலந்த பாற் சோறுண்பித்தும், யானையைக் கொல்ல ஏவியும், இறுதியிலே கல்லோடு கட்டிக் கடலில் வீசியும் கொல்ல முயற்சிகள் நடத்தினர். அந்த நிலையில் அப்பர் "சொற்றுணை வேதியன்" எனும் தூமொழி நற்றமிழ் மாலையாகிய நமச்சிவாயப் பதிகம் பாடினார்.

அற்றம் முன் காக்கும் அஞ்செழுத்து மாலை பாடவே கட்டறுந்தது; கல்மிதந்தது கல்லே

தெப்பமானது; அப்பர் அதன் மீதமர்ந்தார்; கல்லே சிவிகையாக வருணனே சுமப்பவனாகத் திருப்பா திரிப்புலியூரில் கரைசேர்த்தார்; அங்கு "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்............ தோன்றாத்துணையாய் இருந்தனன்." எனும் பதிகம் பாடிப் பரவினார். பின் அடியவர் புடைசூழப் பலதலம் பணிந்து திருவதிகைப் பதிக்கு எழுந்தருளினார். அங்குள்ளாரும் அடியவரும் பலவிதவரிசைகளோடும் அப்பரை வரவேற்றனர்.

*"தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியும், தாழ் வடமும்*
*நாயகன் சேவடி தைவருசிந்தையும், நைந்து ருகிப்*
*பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும், பதிகச் செஞ்சொல்*
*மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.*

என்பது வரவேற்ற பல்லாயிரம் அடியார்கள் கண்கள் மூலம் அப்பரைக் கண்டு காட்டும் சித்திரம். இத்திருக்கோலங் கண்டவர்களின் கருத்திலெழுந்த உணர்வலைகள்:

*"கண்டார்கள் கைதலைமேற் குவித்திந்தக் கருணை கண்டால்*
*பிண்டாய செய்கை அமண்கையர் தீங்கு விளைக்கச் செற்றம்*
*உண்டா யினவண்ணம் எவ்வண்ணம் என்றுரைப்பார்கள் பின்னும்*
*தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே."*

தயாமூலதர்மமாகிய சொரூபமாக விளங்கும் இந்த அடிகளாருக்கு, மிண்டராயினும் இந்தச் சமணர்கள் (தங்களையும் சாதுசனம் என்பவர்கள்) இவ்வாறான கொலைப்பாதகமான தீங்கை விளைவிக்கும்படி சினமும் பகையும் உடையவராயினரே. இது எவ்வண்ணம் உண்டானது என வியந்து நின்றனர். அத்தனை ஆபத்தையும் நீக்கிக்காத்துத், தொண்டனை ஆண்டுகொண்ட சிவபிரானை வியந்துதொழுது துதித்தனர்.

தொண்டரோடும் சென்று திருவதிகைப் பெருமானை வணங்கிப் பலவேறு பதிகமாலைகள் சூடிப் பணிந்திருக்கும் நாளில் இவை அறிந்த பல்லவவேந்தன் வந்து அப்பரை வணங்கிச் சைவனானான். சமணிருளை ஒட்டித் தன்பெயரோடுநிற்கக் குணபரவீச்சரம் எனும் கோயிலையும் கட்டுவித்தான்.

சிலநாளின்பின் திருஞான சம்பந்தர் செயலறிந்து அவரைக் கண்டுதொழச் சீர்காழிப்பதிக்குச் சென்றார். அப்பர் வருகையறிந்தபிள்ளையாரும் அடியார் சூழ எதிர் கொண்டுவந்தார். பிள்ளையார் கண்டு காட்டும் அப்பர் திருக்கோலச் சித்திரம்:

*"சிந்தை இடையறா அன்பும், திருமேனி தனில சைவும்,*
*கந்தைமிசையாம் கருத்தும், கையுழ வாரப் படையும்,*
*வந்திழி கண்ணீர் மழையும், வடிவிற்பொலி திருநீறும்,*
*அந்தமிலாத் திருவேடத் தரசும் எதிர் வந்தணைய*

- சம்பந்தர் புரா. 269-

"கண்ட கவுணியக் கன்றும் கருத்தில் பரவும் மெய்க்காதல்
தொண்டர் திருவேடம் நேரே தோன்றியதெனத் தொழுதே"

(ஷ. 270)

கவுணிய குலதீபரான பிள்ளையார் தமது கண்முன் பல்லாயிரம் சிவனடியரைச் கண்டுளரேனும், அவர்கற்பனையிலே கனவு கண்டு வந்த மெய்யான சிவதொண்டர் திருவேடத்தை நனவிலே இன்று தான் காணப் பெற்றேன் என்று அகமும் முகமும் மலர்ந்து எதிரணைந்து தொழுதார். அப்பரோ பிள்ளை யாரை வணங்கினார். அப்பரே என்றழைத்த பிள்ளையை நாவரசரும் பிள்ளை யாரே என அழைத்து உள்ளம் ஒன்றி இருவரும் சீர்காழிப் பிரானைப் பணிந்தனர். அன்புரு நெஞ்சங்கள் தாங்கலந்தொன்றின.

இருதிறந்தடியார் கூட்டமும் இணைந்து செல்லும் இனிய காட்சி:

*"அருள்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்*
*அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்*
*பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற*
*புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம் உய்ய*

இருட்கடு உண்டவர் அருளும்
அகிலம் எல்லாம் ஈன்றாள்தன்
திருவருளும் எனவும்கூடித் தெருட்கலை ஞானக்கன்றும் அரசும்
சென்று செஞ் சடைவானவர் கோயில் சேர்ந்தாரன்றே

அப்பர் புரா : 185-

உருவில் இருவராயினும் உணர்விலும் பயனிலும் அர்த்த நாரீசுவரர் போலே இருவரும் இணைந்திருந்தனர் என்பது காட்டப் பெறுகிறது.

''அருளென்னும் அன்பீன்குழவி'' எனும் குறள் மொழிப்படியே முதலுவமை, அருட் கடலும் அன்புக்கடலுமாக, பிள்ளையும் அப்பரும் என அமைகிறது.

"கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது" என்றபடி இருவர் திருவுள்ளமும் கருதி உணர்வது ஒன்றே என்பது புண்ணியக்கண் இரண்டும், அவையும் சைவ நெறி எனப்படும் முதலுக்கு அதன் அகமுகத்தமைந்து ஓரிடத்திலுள்ளசினை என அமைகிறது உவமை.

அடுத்து நஞ்சு (கடு) உண்டு கொத்தவனருளும், கருணையால் எவையும் பெற்றுதவும் அம்பிகையருளும் என்ற உவமை, அம்மையப்பராய்ப் பார்வதீபரமேசர் என இருவர் ஒருவராய் ஒன்றிணைந்து உயிர்க்குலத்தைத் தந்தும் தாங்கியும் நிற்கும் பிறிவிலாத கருணை போலவே இருவரும் உலகை உய்விக்க வந்த பேருபகாரிகள் என உணர்த்தும்.

அங்கு தோணியப்பரைத் தொழுது நின்ற போது ''அப்பரே உங்கள் தம்பிரானாரைப் பாடீர் என்று பிள்ளையார் பேச, அப்பரும்'' பார் கொண்டு மூடி எனும் பதிகம் பாடித் தொழுதார். இவ்விடத்தும் பிள்ளையார் தம்பிரானை, அப்பரே உங்கள் தம்பிரான் எனக் கூறும் உணர்வின் ஒற்றுமைநயம் சிந்தனைக்குரியது.

பிள்ளையார் திருமாளிகையில் அப்பர் விருந்துண்டு சிலநாள் இறைவனைத் தொழுது பாடிப்பணி செய்திருந்து பிரியா விடை கொண்டு பிறதலங்கள் பணியச் சென்றனர்.

சிலகாலத்தின்பின் இருவரும் இணையத் திருவருள் கூட்டியது. அந்நிலையில் பலதலங்களுக்கு யாத்திரை செய்தனர். அப்போது திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்றுப் பஞ்சத்தால் வாடுவோர் பசிதீர்த்தனர்.

வேதாரணியத்தில் திருக்கோயிற் கதவு திறக்கவும் அடைக்கவும் பதிகம் பாடித்தடையின்றி வழிபாடு செய்பவர்க்கு வழிசமைத்துதவினர்.

அங்கிருந்து சம்பந்தர் சமண் இருள் ஓட்ட மதுரை சென்றார். அப்பர் வட கயிலாயயாத்திரை முடித்து மீண்டார். சம்பந்தர் தென் பாண்டி நாட்டு விஜயம் முற்றி மீண்டார். திருப்பூந்துருத்தியில் இருவரும் மீண்டும் இணைந்தனர்.

இந்த மூன்றாவது இணைவு நிகழ்ச்சிக்கு இணையானதொரு கூட்டத்தை நாம்வேறு எங்கேயும் காணலரிது. ஓரளவு தம்பிரான் தோழரும் அவர்தம் தோழரான சேரமான் பெருமாள் இணைவும் ஒப்பாகலாம்.

அப்பர் திருப்பூந்துருத்தியிலுள்ளார் என்பதை அறிந்தபிள்ளையார் அவரை அணையும் பேரவாவோடு வருகிறார். பிள்ளையாரது தென்னாட்டுத்திக்கு விசயம் பற்றிய செய்தியை அடியவர் கூறக் கேட்டு உள்ள உவப்போடு அப்பரும் வரவேற்று வணங்க விரைகின்றார். அடியார் கூட்டத்திடையே ஒருவராகச் சென்று தூரத்தே கண்ட மாத்திரத்தே தொழுது நடுவணைந்து ஆரா அன்போடு அவர் சிவிகையைச் சுமப்பாரோடு சேர்ந்து தாமும் சுமந்து வந்தார். இதையாரும் அறிந்திலர். சம்பந்தரும் திருவருளாலே சந்தேகங் கொண்டு

"அப்பர் இங்குற்றார் என வந்தோம் கண்டிலமே அவர் எங்குற்றார்" என வினாவினார். விடை சிவிகையின் கீழிலிருந்து எழுந்தது."

*"உருகா நின்று உம்மடியேன் உம்மடிகள் தாங்கிவரும்*
*பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற்றேன்" என்றார்"*

-அப்பர் புரா. 3860-

இங்கு நாவரசர் அடியேன் என்றும் உம்மடிகள் தாங்கிவருதல் என்றும், அது இறையருளால் எளிது (அருமையில் அரிய பெரும் பேறு) எய்தப் பெற்ற பேரின்பத்தில் செம்மாந்து நிற்கிறேன் என்றும் அதுவும் உமது திருவடிக்கு அணுக்கன் தொண்டனாகி நிற்கிறேன் – இங்குற்றேன் என்றும் விடை பகர்ந்து நிற்கும் வினயமும் மெய்யுணர்வு விளக்கமும் ஆழமாக விசாரித்துத் தெரிய வேண்டியன.

அவ்வுரை கேட்டதும் பிள்ளையார் தம்மை அபராதிபோல எண்ணி உடனே பல்லக்கிலிருந்து இறங்கி வந்து மிகுந்த உள்ளப் பதைப்போடு அப்பர் பாதம் பணிய அவரும் முந்திப்பிள்ளையார் பாதம் பணிந்தார். இருவரும் எழுந்து ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். கண்ட தொண்டர் யாவரும் தொழுது துள்ளி ஆனந்த பரவசராயினர்.

பின் பூந்துருத்திப் பெருமானைத் தொழுது பாடிச் சில நாளங்கிருந்தனர். அப்பர் வடநாட்டு யாத்திரையும் பிள்ளையார் தென்னாட்டு யாத்திரையும் பரிமாறிக் கொண்டனர். அப்பரும் பிள்ளையாரும் பிரியாவிடை பெற்று இருதிசையிலும் தலயாத்திரை சென்றனர்.

இவ்விருவர் திருவுள்ளத்திலும் பரஸ்பரம் தம்மிலும் தமக்கினியவராக மற்றையவரை அன்பு செய்து மதித்து வழிபடுமாற்றைக் காணுகிறோம்: இவ்வாறான நோக்கிலே சிவபோதம் முதிர்ந்து சிவயோகமாகக் கனியும் போது அப்பர் பெருமானின் உளக்கோள் சில திருப்பாடல்களிலே காண முடிகிறது அவை:

*"கனியினும் கட்டி பட்ட கரும்பினும்*
*பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்*
*தனிமுடி கவித்து ஆளும் அரசினும்*
*இனியன் தன்னடைந் தார்க்குஇடை மருதனே"*

-திருமுறை 5 - 14 -9-

தானொருவனே ஒரு பொறியும் புலனும் கொண்டு அநுபவிக்கும் இன்பம் பொருளன்று; ஐந்து பொறிபுலன்களாலும் ஒருங்கு அநுபவிக்கும் அரிவையரின்பம் முன்னையதிலும் சிறந்ததெனினும் பொருளன்று; நாட்டுமக்கள் பலரும் நலமுற்று மகிழ நாமும் நலமுற்றிருக்கும் நாடாளும் நாயகன் பெரிதெனினும் அதுவும் சாசுவதமன்று; நிலையற்று மாறிவிடும் ஆதலின் அவை வேண்டா. தன்னடைந்தார்க்கு என்றென்றும் மாறாத பேரின்பனாம் இனியவன் இடைமருதீசனே எனக்கண்டார்.

*"என்னி லாரும் எனக்கினி யாரிலை*
*என்னிலும்மினி யானொரு வன்னுளன்*
*என்னுளே உயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு*
*என்னுளே மன்னும் இன்னம்பர் ஈசனே.* (5.21.1)

நாமே நமக்கினியர் வேறிலர் என நாம் எண்ணுகிறோம். அது பெருந்தவறு. ஒவ்வொரு பருவ நிலையிலும் தாய் தந்தை நண்பர் குரு காதலி மக்கள் எனக் கிளைதாவும் குரங்கு போல் மனம் அவ்வப்போது இனி தெனநாடும். அவ்வப்போது அவ்வவரும் அவ்வப்பொருளும் இனிதாகலாம். நிரந்தரம் இனிதாவதில்லை. மறுகணம் இன்னாதவையாதலும் உண்டு.

இவ்வாறே நாமும் நமக்கே இன்னனாதவராதலைக் காண்கிறோம். அறிவீனத்தால் அல்லாத செய்தும் விரும்பியும் அல்லலுறும் போது நாமே நம்மை இன்னாதவராயுணர்ந்து வெறுக்கிறோம். ஆனால் சிவனோ என்றும் எவர்க்கும் மாறாத இனியனாய் இருக்கிறான். இது அநுபவித்து அறியும் இனிமை பிறவாறறியவராது. இதனை அப்பர் எண்பத்தோராண்டு தொண்டு வாழ்வில் கண்டு விண்ட துணிபு.

இவ்வுண்மையை எமக்கு உணர்வித்த திருநாவுக்கரசு நாயனார் எம்மிலும் எமக்கு மிகவும் இனியரே. அவர் குரு பூசைத்திருநாள் சித்திரைச் சதய நன்னாள். புண்ணியா உன்னடியே புகல் என்போம். ✪

# கோமாதா

- சைவப் புலவர் சு. செல்லத்துரை-

பசு சாதுவான மிருகம்

"பசு பால் தரும்" — என்பது நாம் பாலர் வகுப்பில் படித்த பாடம்.

✦ தாய் தன் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் பாலூட்டி வளர்ப்பாள். நம் அனைவர்க்கும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப் பருவம் வரை பால் தந்து காப்பது பசு.

✦ நம் உயிர் பிரியும் வேளையிற்கூட இறுதியாக (உற்றார், உறவினர்) எம் வாயில் விடப்பால் தருவது பசு.

✦ ஆதலால் தாய்மார்களுக்கெல்லாம் அரசியாகவும் (கோ – அரசு, மாதா – தாய்) பசுத்தாயாகவும் (கோ – பசு, மாதா– தாய்) கோமாதா எனப் போற்றப்படுவது பசு.

✦ நாம் கழித்து விடும் புல், தவிடு, கஞ்சி, கழுநீர், வைக்கோல், புண்ணாக்கு, இலை, குழை முதலானவற்றை உண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பூரண சத்துள்ள பாலைத் தருவது பசு.

✦ தனது கழிவுப் பொருள்களான சாணியையும், மூத்திரத்தையும்கூட பயிர்வளக்கும் உயர்ந்த இயற்கை உரமாகவும், கிருமி நாசினியாவும் தருவது பசு.

✦ நமது வீட்டையும் சுற்றாடலையும் கூடச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உபகாரமான சாணியைத் தருவது பசு.

✦ எல்லாத் தேவர்களும், முனிவர்களும், புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் எழுந்தருளி இருந்தற்குரிய தெய்வத் திருவுரு பசு.

✦ எல்லாத் தேவர்களின் அனுக்கிரகத்தையும் பெறுதற்குரிய வழிகாட்டுப் பொருளா யிருப்பது பசு.

✦ சைவ சமயக் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணிய ஆவாகனத்துக்குரிய பாலைத்தருவது பசு.

✦ இறைவன் உவக்கும் அபிஷேகத்துக்குரிய பஞ்ச கௌவியத்துக்கான பால், தயிர், நெய். கோமயம், கோசலம் என்பவற்றைத் தரும் தெய்வீகத் தன்மையுடையது பசு.

✦ சைவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிட்டை செய்யுமுன் கருவறையைத் தூய்மை செய்து தேவர்களின் ஆசியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுவது பசு.

✦ சைவாலய நித்திய பூசையில் கோபூசை செய்து மலரிட்டுத் தூப தீப ஆராதனை செய்து பிரசாதம் கொடுத்து வணங்கப் படுவது பசு.

✦ சிவபூசையின் இறுதியில் செய்யப்படும் கபில பூசைக்கு உரியது பசு.

✦ கோதானப் பொருளாவதன் மூலம் பாவம் நீக்கிப் பெரும் சிவ புண்ணியத்தை ஈட்டித்தருவது பசு.

✦ சிவகதி நல்கும் சிவ சின்னமான திருநீற்றின் மூலப்பொருளான சாணியின் உற்பத்தித் தானமாயிருப்பது பசு.

✦ புது வீடு அமைக்கும்போது தானசுத்திக்காக அங்கு கட்டப்படுவது பசு.

✦ திருமணத்தின் போது மாங்கல்ய தாரணம் முடிந்தவுடன் எல்லாத் தேவர்களின் ஆசிர்வாதத்தையும் பெறுவதற்காகத் தரிசனமாவது பசு.

✦ மணமக்கள் நாள் முகூர்த்தத்தில் அருந்துவதற்குரிய பால் பழத்துக்கான பாலைத் தருவது பசு.

✦ அபரக்கிரியையில் அந்தியேட்டி முடித்து வீட்டுக்கு வரும் போது வாயிலில் தரிசனமாவது பசு.

இவ்வண்ணம் நம் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளிலும் உடனிருந்து எம் வாழ்வைப் புண்ணிய நெறிப்படுத்தவல்ல பசுவைப் போற்றி வளர்ப்பது நம் தலையாய கடமையாகும்.

பசுவுக்கு உணவுகொடுத்தல் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமை என்பது "யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒருவாயுறை" என்னும் திருமூலர் திருமந்திரத்தால் உணரப்படும்.

பசு ஓம்புதல் இம்மை, மறுமையாகிய இருமைப் பயனையும் தரவல்லது.

திருமூலர், சண்டேசுரர், ஆனாயநாயனார், மனுநீதிகண்ட சோழன், ஞானப்பிரகாசமுனிவர் பசு ஓம்புதல் மூலம் சிவகதி பெற்ற செய்திகள் இதற்கு ஆதாரமாகும்.

திருமூலர்

இமயத்திலிருந்து தென்னாடு நோக்கி வந்த சுந்தரமுனிவர் என்பவர் வரும் வழியில் பசு மேய்க்கும் மூலன் எனும் இடையன் இறந்து கிடக்க அவனைச் சூழ்ந்து நின்று தன்யோக சிந்தனையினாற் பசுக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதைக் கண்டார். பசுக்களின் துயர் துடைக்காது செல்வது பாவமெனக்கருதித் தன் யோக சிந்தனையில் தனது உடலை ஒரு மரத்தின் மேல் கிடத்திவிட்டு மூலன் உடலிற் புகுந்து பசுக்கள் மகிழுமாறு செய்து அவற்றை உரியோரிடம் சேர்ப்பித்தார்.

மீண்டு வந்தபோது தன் உடலைக் காணாமையால் இறைவன் ஆணைப்படி அவ்விடத்தில் தவமிருந்து மூவாயிரந் தமிழ் எனும் திருமந்திரத்தைத் தந்து திருமூலநாயனார் எனும் சிறப்புப்பெயர் பெற்றுச் சிவகதி அடைந்தார்.

சண்டேசுரர்

பசு மேய்ப்பவன் ஒருவன் பசுவைக் கோலால் அடிப்பதைக் கண்டு மனம் பொறுக்கமாட்டாத விசாரசருமர் எனும் பிராமணச் சிறுவன் அன்றுமுதல் மேய்ப்பானை விலக்கித் தானே பசுக்களை மேய்த்து வந்தான். மண்ணியாற்றங்கரையில் முறையாகப் பசுக்களை மேய்த்து அவை தாமாகச் சுரந்து பொழிந்த பால் கொண்டு அப்பால் வீணாகா வகையில் மணலில் அமைத்த சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து வழிபட்டார். இதன் உண்மையை அறியாத மூடர் சொற்கேட்ட தந்தையார் பாலை மண்ணில்

சொரிந்து பாழ் செய்கிறானே என அதைக்காலால் இடறத் தன் சிவபூசைக்குக் குந்தகம் செய்தவர்களைச் சிறுவன் கோலால் அடிக்க அது மழுவாகித் தந்தையின் கால்கள் தறிபட்டன. சிவபூசையின் உறுதி கண்ட சிவபெருமான் தந்தைக்கும் தனயற்கும் அருள்புரிந்து விசாரசருமருக்குச் சிவவழிபாட்டின் பயன் நலகும் சண்டேசுரர் பதம் நல்கினார். பசு ஓம்பலின் பயன் சண்டேசுரர் பதம் நல்கியது.

ஆனாய நாயனார்

பசுக்குலம் மேய்த்தலையே சிவப்பணியாகக் கொண்டவர். புல்லாங்குழல் இசைக்கும் பேரிசையாளர். பஞ்சாட்சர மந்திரத்தைப் புல்லாங்குழலில் இட்டு இசைத்துப் பசுக்களை மகிழச் செய்பவர். இவரது பஞசாட்சர இசையில் தேவர்களும் தம்மை மறந்து மகிழ்ந்தனர். சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளும் தம்மூர்க்கம் தணிந்து தெய்வ இசைப்பட்டன. இசையால் பசு மேய்த்த சிவ புண்ணியத்தால் ஆனாயர் சிவபதம் பெற்றார்.

மனுநீதிகண்ட சோழன்

தன் மைந்தன் அரச வீதியில் உலாவரும் போது தேரின் இடைப்புகுந்த பசுக்கன்று அடியுண்டு இறந்தது. இதனைக் கண்ட தாய்ப்பசு தாங்கொணாத் துயரால் கண்ணீர் விட்டுக் கதறி அழுதது. இதை அறிந்த மன்னன் பெருந்துயர் உற்றான். மந்திரிகள் சொன்ன வழிமுறைகள் பசுவின் துயரைத்துடைக்க உதவா என உணர்ந்தான். கன்றை இழந்து வருந்தும் தாய்ப்பசு போலத் தானும் தன் ஒரே மகனை இழந்து வருந்துவதே முறை எனத் துணிந்தான். தன் மகனை வீதியிற் கிடத்தித் தானே அவன் மீது தேர் செலுத்திக் கொன்றான். தருமம் தன் வழிச்செல்கை கடனென்று தன் மைந்தன் மருமந்தன் தேராழி உற ஊர்ந்த அருமந்த செயல் கண்ட சிவபெருமான் அருளால் பசுக்கன்றும், அரசிளங்குமரனும் உயிர் பெற்று அனைவரும் சிவகதி பெற்றனர். ஒரு பசுவின் கன்றைக் கொன்றதற்காகத் தன மகனைக் கொன்று பசு ஓம்பில் பரகதி பெற்றார் மனுநீதிச் சோழன்.

ஞானப்பிரகாச முனிவர்

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நடந்தகாலம் ; யாழ்ப்பாணத்தில் கொலையும் புலாலும் மறுத்த சைவமக்கள் வாழ்ந்த காலம். போர்த்துக்கேயர் பறங்கியர்க்கு உணவாக நாளுக்கொரு வீட்டார் கொழுத்த பசுக் கொடுக்க வேண்டிய கொடிய சட்டம். தன்முறை வந்த போது பசுக் கொலையாகிய கொடிய பாவம் செய்விதிலும் பார்க்கப் பரதேசம் போவதே மேல் எனக் கருதி இரவோடிரவாகக் கடல் கடந்து இந்தியா சென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அங்கு சிதம்பரம் சேர்ந்து தவமியற்றிச் சிவஞானம் பெற்றுச் சிவகதி சேர்ந்தார். பசுக் கொலைக்கஞ்சிப் பரதேசம் போய்ச் சிவகதி பெற்றவர் ஞானப்பிரகாச முனிவர்.

இவ்விதம் சிவகதி நல்கவல்ல தெய்வப் பசுவுக்கும் அதன் குலமான மாடுகளுக்கும் இன்று என்ன நடக்கிறது? கொன்று தின்கிறார்களே. உடல் வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைச் சேர்த்துப்

பாழ்படுகிறார்களே. பசுவின் ஊனைத் தின்று தம் ஊனைப் பெருக்குன்கிறார்களே.

வள்ளுவரையும், திருக்குறளையும் வானளாவ வாயாரப் போற்றிப் புகழ்பெறும் கனவான்கள்

*"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்"*

என்பதை அறியார்களா?

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்"*

என்ற குறளை ஏன் படித்தார்கள். கொல்லும் போது என்னைக் கொல்லாதே என்று கண்ணீர் வடித்து "அம்மா" எனக் கதறும் அவல ஒலி காதில் விழவில்லையா?

புலால் உண்பவர் புலையர் என்பதை மறந்து யார் யாரையோ புலையரெனப் போலித்தனங் காட்டுவது கொடுமையல்லவா?

பால் வற்றிய பசுவையும், இளைத்த பசுவையும் இறைச்சிக்கு விற்பது அடுக்குமா?

சைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு, தம் நெற்றியில் திருநீற்றைப் பூசிக் கொண்டு மாட்டிறைச்சி உண்பவர்களே! இக் கொடிய பாவத்திற்கு என்ன பிராயச்சித்தம் செய்யப்போகிறீர்கள்.

பசுவின் குருதி ஒருதுளி நிலத்தில் வீழினும் அதிலிருந்து பல கோடி அசுரர்கள் தோன்றி உலகைக் கெடுப்பர் என்று நீதிநூல் சொல்வதைக் கேளுங்கள்.

அதை உண்பவர்கள் அரக்கர்களாகி அவர்களால் இந்த உலகம்படும் அவலத்தைக் கண்முன்னால் காண்கிறீர்களல்லவா.

கொன்றவனும் கொடுத்தவனும் தின்றவனும் கொடும்பாவிகளாகி மீளாத் துன்பத்தில் அழுந்துவர் என்பதை உணர்வதெப்போ?

அதிகபால் எடுக்க வேண்டுமென்பதற் காகப் புலால் எச்சங்களை அரைத்துப் பசுவுக்கு உணவாகக் கொடுப்பதும், புலால் உண்ட பசு தரும் பாலைச் சிவாலயத்திற்குக் கொடுப்பதும் பாவமான செயல் அல்லவா.

சைவச் சான்றோர்களே! பசுக் கொலையைத் தடுத்து நிறுத்தாமல், அதன் பாவத்தை உலகுக்குணர்த்தாமல் இருப்பது அப்பாவத்தில் பங்காளிகளாக்கி விடுமன்றோ.

மாட்டைத் தின்று மக்கள் அரக்கர்களாகும் நிலையை மாற்றி மாட்டைக்காத்து மக்களைத் தேவர்களாக்கும் மார்க்கம் காட்ட முன்வாருங்கள். ✪

# தமிழ் அன்பு சிவம்

- சைவப் புலவர் திருமதி இரத்தினம் அப்புத்துரை -

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்.... அன்பே சிவமாவது ஆருமறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" என்பது திருமந்திரம். அன்பு வேறு சிவம் வேறு அன்று என்பதும், அன்புதான் சிவம்; சிவந்தான் அன்பு என்பதும் இந்தத் திருப்பாடல் மூலம் தெளிவாக்கப்படுகின்றது.

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*

*தன்னை நன்றாகத் தமிழ்ச்செயு மாறே",*

என்பது திருமந்திரம் தரும் மற்றோர் சிந்தனை. தன்னைத் தமிழ்ச் செயுமாறு என்னை இறைவன் படைத்தனன் என்பது வலியுறுத்தப்படுகின்றது. தமிழ் செய்தல் அன்புசெய்தல் என்பது, அதுவும் தன்னை அன்பு செய்வதற்காக இறைவன் என்னை நன்றாகப் படைத்தனன் என்கின்றது. நன்றாகப் படைத்தல் கூன் குருடு செவிடு பேடு ஆய கூறுகளி னின்றும் விலகிய – நல்லநிலை என்பதாகின்றது. அஃதாவது அன்பு செய்வதற்கு இடர் தராத பிறவி, என்பது. இறைவழிபாட்டிற்கு எளிமையான நெறி பேசப்பட்டது. இங்கே தமிழ் என்னுஞ் சொல் அன்பு என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. அன்பினைந்திணைக் களவியல் என்னுதலிற் றோவெனின் தமிழ் நூதலிற்று என்பது அகப்பொருளிலக்கணம். இங்கேயும் தமிழ், அன்பு என்னும் பொருள்பட நிற்றல் தெளிவு, இந்த நிலையில் தமிழ். அன்பு, சிவம் என்பன தெய்வீகத்தை உணர்த்தும், ஒருமைப் பாடுடையன, என்பது புலனாகின்றது.

சங்கமிருந்து தமிழை ஆய்ந்து செப்பஞ் செய்தனர் தமிழ்ச் சான்றோர். கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து தமிழைப் புனிதமாக்கினார் – தமிழ் செய்தார் எனவும் அறிகின்றோம்.

*"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்ப லத்துமெம் சிந்தையுள்ளும்*

*உறைவான் உயர்மதிற் கூடவி னாய்ந்தவொண் தீந்தமிழின்*

*துறைவாய் நுழைந்தனையோ..................."*

என்று தித்திக்கத் தித்திக்கத் திருவாசகத் தேன் தந்த மணிவாசகனார் கோவையிற் கூறியது கொண்டு தமிழின் இனிமை தெய்வீகம், என்பன புலப்படுகின்றன. இதே கருத்துத்தான் குமரகுருபர சுவாமிகளுக்கும் இருந்திருக்கின்றது. எப்படி எப்படியெல்லாமோ சொல்லி நிறைவு காண விழைந்த சுவாமிகள், "தொடுக்குங் கடவுட் பழம் பாடற் றொடையின் பயனே, நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" என ஆராமையோடு சொல்லி இறும்பூதெய்து கின்றார்கள். தமிழ்ச் சுவை இறைவன் என்பதை இங்கே கண்டு கொள்கின்றோம். பயனும் அவன்தான் என்பதுங் காட்டப்பட்டுளது. அதனாலேதான், "முத்தமிழால் வைதாரையும் இங்கு வாழ வைப்போன்" என்று கந்தரலங்காரம் பேசும். வைதாலென்ன வாழ்த்தினாலென்ன, தெய்வீகம் பிரவாகிக்கும். தமிழினால் நடைபெறும்போது பயனுள்ளதாகவேயிருக்கும். தமிழ் அன்பு எனவே வையபடும் பொழுதும் அன்புடனாகியே இருக்கும். தாயின் மடியிற் தவழுங் குழவியைத் தாய் அன்பு மேலீட்டினாற் கடிவது போன்றிருக்கும்.

நல்லது செய்கின்றேன்; தமிழ் மாலைதானே அணிவிக்கின்றேன் என்ற இறுமாப்பிற்றவறிழைத்து விடுவேனோ என்ற ஆதங்கத்தாற் போலும் முத்தமிழை ஓதித் தளராதே, முத்தியடியேனுக் கருள்வாயே'' என்றார் அருணகிரிநாதர். "முத்தமிழை ஓதுகின்றேன், முத்தமிழை ஓதுகின்றேன் என்று பிழைபாடடைந்து இறைமைக்கு மாசு கற்பித்திடாதிருத்தற் பொருட்டு முத்தியை எனக்குத் தந்தருள்வாயாக'' என்று வேண்டுகின்றார்கள். முத்தியில்லாவிட்டாலும் பாதகமில்லை; முத்தமிழ் என்னும் பேரான் தெய்வீகத்திற்குக், களங்கமேற்பட்டுவிடக் கூடாது. அதற்காகவே முத்தி; எனக்காக அன்று, என்பதொரு தொனிப் பொருளும் அங்கே ஊருடுவி நிற்பதை உணருகின்றோம்.

## அட்டைப்பட விளக்கம்

தேவர் முதலானவர்களை வருத்தி இடர் விளைவித்தான் கயமுகாசுரன். அவனை அடக்கி மூஷிக வாகன மாக்கித் தாம் அதிலே றியிருந்து வானவர்க்கும் ஏனையோர்க்கும் அருள் புரிந்தார் விநாயகப் பெருமான்.

பின்னர் திருச் செங்கட்டங் குடியில் எழுந்தருளி முறைப்படி சிவபூசை செய்தார். அவ்விடம் கணபதீச்சரம் என்று அமைவதாயிற்று.

*மீண்டுசெங் காட்டி லோர்சார் மேவி மெஞ் ஞானத் தும்பர்*
*தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித் தேத்திப்*
*பூண்டபே ரன்பிற் பூசை புரிந்தனன் புவியு ளோர்க்கு*
*காண்டகும் அனைய தானங் கணபதீச் சரம தென்பார்.*

கந்தபுராணம்

இறைவனற் உபதேசிக்கப்பட்டது தமிழ்; இறைவனாற் புனிதமாக்கப்பட்டது தமிழ்; இறைவனால் ஆராயப்பட்டது தமிழ்; தமிழ்ப்பயன், தமிழ்ச் சுவை, என்றெல்லாம் கண்டு கொண்டோம். இந்தக் கருத்துக்களையெல்லாம் தெளிவாகக் கண்டு கொண்டவர், எங்கள் தமிழ்கிழவி ஔவை. கூழுக்குப்பாடிய ஔவை தமிழ்த் தேனுக்காகவும் பாடினார். தமிழைப் பாடினார்; தமிழ் பாடினார்.

வெவ்வினையை வேரறுக்க வல்லவன் விநாயகன். அந்த விநாயகனிடம் சங்கத் தமிழ் மூன்றினையும் தரும்படி வேண்டுகின்றார் ஔவையார். எடுத்த எடுப்பிலேயே சங்கத் தமிழ் மூன்றையும் தாவென்று ஔவையார் கேட்கவில்லை. கூர்த்த அறிவுடைய கிழவி ஆதலின், எந்த வகையிலே தொடர்பு கொள்ள வேண்டுமென்று நன்கு தெளிந்திருந்த அவர் விநாயகனைக் கவரக்கூடிய ஓர் கருத்தினை முன்வைக்கின்றார். பால், தெளிதேன், பாகு, பருப்பு என்னும் நான்கையும் கலந்துனக்கு நான் தருகின்றேன், நீ சங்கத் தமிழ் மூன்றை மட்டும் எனக்குத் தந்தால் போதும் எனறு வினவும் ஔவையின் அந்தரங்கத்தில், ஏதோவொன்று தொக்கிருக்கின்றது என்று உணர முடிகின்றது. கூடலின் ஆய்ந்த தமிழில் இறைவன் இருப்பதை ஔவையார் உணர்ந்திருக்கின்றார் போலும், அவனருளாலே அவன்தாள் வணங்கி, அவனை யாசிக்கின்ற நிலைமையையும் ஔவையாரின் செயலிலே கண்டுகொள்ள முடிகின்றது. இச்செயற்பாடும் அன்பு சிவம் தமிழ் என்பன ஒரு பொருளன என்று உணரவைக்கின்றது. ✪

# சித்திரையில் முத்திரை பதித்த சித்திரம் சைவநீதி

- முருகவே பரமநாதன் -

"சமயமெல்லாஞ் சக்தியுண்டு சிவமுமுண்டு
சண்டாளா பிரித்தல்லோ தள்ளினார்கள்
சமயமெல்லாம் வேதாந்தசித் தாந்தமுண்டு
சாதகத்தைப் பாராமற் தயங்கினார்கள்
சமயமெல்லாம் நாதமுண்டு விந்துமுண்டு
காக்காமற் கெட்டாரக ஞலகத்தோர்கள்
சமயமெல்லாம் அம்பரமாம் ஞானமுண்டு
தாயை விட்ட பாவத்தாலே தவறிப்போச்சு
கைலாசக் கம்பனிச் சட்டைமுனி-

இறைவனைச் சைவன் என்றார், நீதி என்றார் மணிவாசகப் பெருந்தகை. இவர் சைவ நீதி கண்டவர். இவரின் அடிச்சுவட்டிற் கச்சியப்பர் மேன்மை கொள் சைவநீதி என ஒரு அழுத்தம் கொடுத்தார். இவற்றை எல்லாம் பிரக்ஞையில் உள் வாங்கிய புதுவைப் (புதுமைப்) புலவன் பாரதி மணக்குளத்து விநாயகரிடம் மேன்மைத் தொழிலிற் பணி என்னை என்றிறைஞ்சினார். புதுவை புதுச்சேரி. இங்கேயமைந்த சினகரம் தான் மணக்குள விநாயகர். இப்பெருமானைப் பாடிய பிரபந்தத்திலேயும் புதுமை செய்தான் பாராதி. "பக்தியுடையார் காரியத்திற்கு பதறார்; வித்து முளைக்கும் தன்மை போல் மிகுந்த பொறுமையுடன் மெள்ளச் செய்து பயனடைவார் என்று துவங்கி "வித்தைக்கிறை வாகனநாதா மேன்மைத் தொழிலிற் பணி என்னை என வேண்டிப் பாடலை நிறைவு செய்கின்றார். இப்பக்தியின் செயற்பாடும், பொறுமையும், போட்டடிக்காத மனோதர்மமும் காரிய உறுதியும் அதால்வந்த பிரயோஜனமும் விதைமுளைத் தலைச் சாதனையாகக் கொண்டு விளக்கி. மேலாந்தரமுடைய ஒரு புனித நிலையில் கருமங்கள் ஆற்றப்பட வேண்டுமென்ற இலட்சியத்தை மேன்மைத் தொழிலிற் பணி என்னை என்ற தொடரால் உலகினர்க்கு விளக்கியுள்ளார் பாரதி. பதறாத காரியம் சிதறாது. மேன் மக்கள் கெட்டாலும் மேன் மக்களே, என்பது ஔவை வாக்கு. பொருள் வளம். சூழ்நிலை வர்த்த மானங்கள் மாறினும் நிலைநிலையா உள்ளம் அவர்களின் எதிர்கால மேன்மையைக் கட்டி யெழுப்பவே செய்யும். எனவே இந்நிலைப்பாட்டின் தளத்திலே – சில நல்ல உள்ளங்கள் சிந்தித்தன, அது காரியப்படும் தேதியும் வந்தது. முயற்சி திருவினையாக்கியது. இருபத்து நான்கு மாதங்கள் முன்னே சைவநீதி உலாவந்தது. சைவநீதி வாழ்க அப் பெருமக்களும், அவர்களைளத் தந்த உருவாக்கிய சைவமும், தமிழும் வாழ்க. வளம் பெறுக. இம்மலர் இன்று அரும்பாய், குவிமலராய்ப் போதாகி இருபத்தைந்தாம் மலராக மணங்கமழ்கிறது. இதை அனுபவிக்கும் சைவ உலகமும், மக்களும் பாக்கியசாலிகள்.

வருடங்கள் 25 சேரின் கால் நூற்றாண்டு திங்கள் பல சேர்ந்து வருடம் இரண்டாகி சைவநீதி செங்கோ லோச்சுகிற தென்றால் இதுவும் ஒரு பிள்ளைத்தமிழ் இலக்கியப் பாங்குதான் 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21 திங்கள் கொண்ட பத்தும் பருவங்களையும் கடந்து அம்மானை, கழங்கு ஊசற் பருவங்கள் இலக்கணத்திற் பேசப் படுகின்றன. புதிய காலப் பிள்ளைத் தமிழிலே துயில் எழற் பருவம், தகர் அடக்கு பருவம், வேலோச்சு பருவம் என்பனவருவிக்கப் பட்டுள்ளன. எனவே சைவநீதி பவனி வந்து தன் நீதிநெறி வழி செங்கோ லோச்சி விழுமிய மிக்க ஆளுமையுடன் துரைத்தனம் செய்கிறது எனின் கருத்தாக்களே அதன் தூண்கள். அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மையோடு ஐந்து சால் பூன்றிய தூண் என்கிறது வள்ளுவம். நேயம் என்கின்ற மனித முத்திரை பொறித்த சமய நீதியை, மொழி ஊடக மூலம் சஞ்சிகை வடிவிற், பேனாமுனைகளில் வண்ணமுறத் தீட்டிப் பழுதிலாத சொன் மணிகளாற் பக்குச் சர்க்கரை சேர்த்துச் சிந்தனைப் புடம் போட்டு, வண்ண மலராக்கி, வெண்ணிலா வீதி வலம் வருவது போற் பூர்ண பொற் கும்பம் வைத்து, மங்கள சின்னங்களுடன் கைவிஷேசப் பொருட்களுடன் சித்திரை முத்திரை குத்திச் சீரான செல்வமாகச் செந்தமிழிலே வெளியாகி வரும் சஞ்சிகை தான் சைவநீதி. நீதி யாவர்க்கும் பொது. மதம்; எல்லா இடத்தும் பொது ஆனாற் சைவநீதி சமயரீதியிற் சிறப்பு. இது ஒருமுத்திரை; மாதங்கள் நாட்களின் சேர்க்கை. அவை பன்னிருராசிகளின் தொடர்பு. மாதங்களில் நான் மார்கழி என்றான் கண்ணன். புதுவருடமும், புத்தாண்டும் எம்மதத்துக்கும் சம்மதம். ஆயின் சைவ சமயிகளுக்குச் சித்திரைத் திங்கள் சிறப்பம்சம். தைசிலருக்குப் புதுவருடம். நமக்குச் சித்திரை முதன் மாதம். புதுவருடப் பிறப்பு சித்திரைத் திங்கள் முதல் தினம். கார்த்திகைக்கு கார்த்திகை, தைக்குப் பூசம், மார்கழிக்குத் திருவாதிரை, ஆவணி ஓணம், ஆனி உத்தரம் என்று வருவதெல்லாம் சித்திரையின் பின்னரே சித்திரைக்குச் சித்ரைச் சித்திரையிற் சீரான பௌர்ணமியில் எனப் பாடி வைத்தனர் நம்முன்னோர். சித்திரையிற் சிறுமாரி என்பர். எனவே சித்திரையில் முத்திரை பதித்த சைவநீதி மனித நேயம் என்னும் முத்திரை தாங்கித் தன்தடம் பதித்து ஈராட்டைப் பருவம் நிறை வெய்தி மங்கள சோபனங்களுடன் மூன்றாமாண்டு மலராகத் தனக்குரிய சிறப்பு இலச்சினை பொறித்து வெளியாகிறது. இதை எப்போ பிரித்துப் படிக்கப் போகிறோமென்று சைவ உலக வாசகர்கள் சிந்தனையளர்கள். சுவைஞர்கள், எழுத்தாளப் பெருமக்கள் மாணவர்கள் வெளி நாட்டு சைவ சமயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புனித வேளையில் சைவநீதி புத்தாண்டு மலராகப் புதுமை பூக்க உழைத்த உழைக்கும் கரங்கட்கு வணக்கம். வாழ்த்து. இம்மலர் பொதிந்த புத்துணர்வுகள் படிப்பவர்களின் உள்ளங்களிற் புதுமை பூத்து, மெதுமை காய்த்து மேன்மை கனியட்டும். அவர்களை மேதகு மனிதர்களாக மாற்றியமைக்கட்டும், புதிய உலகம் சமைக்கட்டும். அங்கே சாந்தி சமாதானம் சந்துஷ்டி, அமைதி ஆனந்தம், ஆளுமை, விழுமியம் செழிக்கட்டும். செழித்துக் கொழிக்கட்டும். இப்புனித கைங்கரியம் சோபனம் பாடட்டும்.

ஈழமணித்திருநாட்டில் சைவ(ம்) நீதி நடந்த பாதையில் பல எழுத்தாளர்கள், சிந்தனைச் செல்வர்கள் பிதாமகர்கள், மூதறிஞர்கள், சித்தாந்த வித்தகர்கள் வலம் வந்தனர். பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் களை கட்டின. சைவசித்தாந்தம் தண்ணெழில் நிழற்றிற்று தேன்பிலிற்கும் திருவாசகமும், மாண்புமிகு திருமுறைகளும் கமழ்ந்தன. நாவலரும், நால்வரும் காவலர் ஆயினர். தடைவிடைகள் மாணவர்களின் மனதில் மலர்ச்சி கொட்டின. கொழும்பு மாநிலத்துச் சைவ ஆலய வரலாறுகள், பெருஞ் சாந்தி விழாக்கள் அறிமுகமாயின. பக்தி இலக்கியப் பனுவல் சில வெளியீடாயின.

எல்லாவற்றிற்கும் மேலாக நுட்பம், ஒட்பம், திட்பம் நிறைந்த ஆசிரியத்தலையங்கம் சைவநீதியை இனங்காட்டிற்று.

அருணகிரியார் முருகனை திருமால் மருகனாகப் பேசித்தான் தன் விண்ணப்பங்களைச் சமர்ப்பணம் செய்தார். அப்பாவம் நிறைத் திருப்புகழ்ப் பகுதி இதோ

*எந்தை வருக ரகுநாயக வருக*
*மைந்த வருக மகனே யினிவருக*
*என்கண் வருக எனதாருயிர் வருக அபிராம*
*இங்கு வருக அரசே வருக முலை*
*யுண்கவருக மலர்சூ டிடவருக*
*என்று பரிவி னொடு கோ சலைபுகல வருமாயன்*
*சிந்தை மகிழு மருகா குறவரின*
*வஞ்சி மருவு மழகா அமரர் சிறை*
*சிந்த அசுரர் கிளைவே ரொடு மடிய அடுதீரா*

ஒரு அபூர்வமான வருகைப் பருவம் மூலம் ரகுராமனை அன்னை கோசலை ஆராமையோடு அள்ளுற அழைக்கும் பாணியில் முருகனை மருகராக்கிய அருணகிரிப் பெருந்தகையின் பாசுரம் மூலம் ஆயிரமாயிரம் கோசங்கள் சைவ நீதியாம் புத்தப் புது மலரை வரவேற்று வாழ்த்துகிறார்கள் எனின் அதன் காத்திரம் எவ்வளவு மேன்மையானது. ஆம் இதிலே எதிர்கால நோக்குத் தொனிக்க வேண்டும். சமகால நிகழ்வு பதிவாக வேண்டும். புதிய கண்ணோட்ப் புதிர் வழங்கப் படல் வேண்டும். எனவே ஆய்வாளரின் கைவண்ணங்கள். சிந்தனைத் திறனுடன் வழங்கப் படவும் வேண்டும். ஆதலின் கற்றதை வெளிக் கொணர்வீர்களாக

*இணரூழ்த்து நாறாமலரனையர் கற்ற*
*துணர விரித்துரையாதார்*

குறளமுதம் 950

என் கடன்பணிசெய்து வாழ்வதே யென்ற சமுதாய நோக்கில் உழைக்கும் இப் பத்திரிகையாளர்கட்கு நாம் செய்யக் கூடிய மிகக் குறைந்த உதவி பாரதி பாடிய வண்ணம் நிதியும், காசும், ஆசியும் வழங்கி சீரிய தொண்டிற்கு உறுதுணையாய் இருப்பது ஒன்றுதான்.

*பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது*

*தமிழ் வேதம் 102*

*கைம்மாறு வேண்டா கடம்பாடு மாரிமாட்*
*டென்னாற்றுங் கொல்லே உலகு*

*மேலது 211*

சைவம் நமது சமயம். அது நிதியே வடிவான இறைவனோடு தொடர்புடையது. காலத்தின் நலிவுகளைப் பயன்படுத்திப் பிறமதம் சைவர்களைத்தம் மதத்திற்கு ஈர்க்கிறது. தம் பெலம் தமக்குத் தெரியாத மன உறுதியற்றோர் சமய மாற்றம், பேர்மாற்றம், கலாச்சார மாற்றங்களில் எடுப்படுகிறார்கள். மனவுறுதி யுள்ளோர் தம்நிலைப் பாட்டினினும் நெறி பிறழாமல் வாழ்கிறார்கள். இதுதான் சைவநீதியின் தனிமுத்திரைச் சித்திரம், இப்பாரிய சேவைக்குச் சைவநீதி தன்னைத் தாயார்ப் படுத்துவதும் வேண்டிய தொன்றே.

நன்றி

*சைவ சமய மேசமயம்*
*சமயா தீதப் பழம் பொருளைக்*
*கைவந் திடவே மன்றுள் வெளி*
*காட்டும்; இந்தக் கருத்தை விட்டும்*
*பொய் வந்து உழலும் சமய நெறி*
*புகுத வேண்டாம், முத்திதரும்*
*தெய்வ சபை யைக் காண்பதற்குச்*
*சேர வாரும் ஜகத்தீரே*

*காடும் கரையும் மனக்குரங்கு*
*கால் விட்டுஓட அதன் பிறகே*
*ஓடும் தொழிலாற் பயன் உளதோ*
*ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய்*
*ஆடும் கருணைப் பரஞ்ஜோதி*
*அருளைப் பெறுதற்கு அன்புநிலை*
*தேடும் பருவம் இது கண்டீர்*
*சேர வாரும் ஜகத்தீரே*

தாயுமான சுவாமிகள்

# சிறுத்தொண்ட நாயனார்

- சிவ. சண்முகவடிவேல் -

சிவபெருமான் நெற்றிக் கண்ணர். நெற்றிக்கண் பொழிந்த செந்தீ அனங்கனை அனங்கனாகச் செய்தது. அதே செந்தீ முருகப் பெருமானையும் உதிக்கச் செய்தது. அழிவையும் ஆக்கத்தையும் தரவல்ல நெற்றிக் கண்ணுடைய சிவபிரான் மகிழ்ந்து எழுந்தருளி இருக்கும் பதி திருச்செங்காட்டங்குடி.. செங்காட்டங் குடியைச் சேர்ந்தவர் பரஞ்சோதியார். பரஞ்சோதியார் சிவபிரானுடைய திருநீற்றுச் சார்பில் நிற்பவர். அரசருக்குச் சேனாதிபதியாகக் காவல் தொழில் பூண்டவர். பரஞ்சோதியார் ஆயுள்வேத மருத்துவக் கலையிலும் வல்லுநர். வடமொழி நூலிற் பேசப்படும் மற்றுங் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். தூய படைக்கலப் பயிற்சியைத் துறை போகக் கற்றவர். சேனாதிபதியானதினால் யானை ஏற்றம் குதிரை ஏற்ற விஞ்சைகளிலும் மேம்பட்டு விளங்கினர்.

பரஞ்சோதியார் பல கலைகளையும் துறைபோகக் கற்றதனால் வடித்து எடுத்த சாறுப்பொருள் இது எனக் கண்டார். சிவபெருமானுடைய திருவடியில் ஆரா அன்பு செலுத்துவதே என்று உணர்வினிற் கொண்டார். பள்ளத்தை நோக்கி வெள்ளம் தள்ளப்படுவது போல் அன்பு பயிலும் பண்பினரானார்.

மன்னவனுக்காகப் பரஞ்சோதியார் படை நடத்திச் சென்றார். வடதேசத்தில் வாதாபி என்னும் நகரை வெற்றி கொண்டார். இரத்தினங்கள், யானை, குதிரை முதலியவற்றைக் கைக்கொண்டு மீண்டார். பார்த்திபன் பரஞ்சோதியாரைப் பார்த்துப் புகழ்ந்து பாராட்டினார். அமைச்சர்கள் அது கேட்டு அரசர்க்கு உரைப்பார்கள்: "சிவதொண்டு சிறந்திருக்கும் வல்லமை யினால் இவருக்கு இவ்வுலகில் ஒருவர் எதிரில்லை" என்றார்கள்.

சிவனடியாரைச் சேனாதிபதி கடமையில் ஈடுபடுத்தியதற்கு இரங்கினான் அரசன். "சிவதொண்டிற் சிறந்து ஓங்குவீர்" என்று விடை கொடுத்தான். நிறைந்த நிதிக்குவையும் நிலங்களையும் வருவாய்க்காக வழங்கினான் மன்னன்.

பரஞ்சோதியார் திருச்செங்காட்டங் குடிக்கு வந்தார். கணபதியீச்சரத்தாரைக் கைதொழுதார். முறை அன்பில் வழுவாத முன்னை நிலைத் திருத்தொண்டை மேற்கொண்டார். தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கையார் கணவர் கருத்து அறிந்து கடன் ஏற்றார். பரஞ்சோதியார் சிவனடியாரை முன்னூட்டுவார். தாம் பின்பு உண்பார். நாள்தோறும் அந்நியதி வழுவாது ஒழுகுவார். மிகப்பெரிய சிவனடியார்கள் முன்பு மிகச் சிறியவராகப் பணிபுரிவர். அதனால் உலகவர் பரஞ்சோதியாரைச் சிறுத்தொண்டர் என அழைப்பர்.

"மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
ஆதலினாற் சிறுதொண்ட ரென நிகழ்ந்தா ரவனியின்
மேல்

(சிறு புரா : 15.)

சிறுத்தொண்டரின் அடியார் பூசை திருக்கைலாசபதியின் திருவடிக்கீழ் சென்றணைந்தது. சிவபிரான் மெய்யடியாரின் அன்பினை நுகரச் திருவுளங் கொண்டார். அருள்பாலிப்பதற்கு வயிரவர் வடிவங் கொண்டு வந்தருளினார். இடத்திருக்கையால் அணைத்த மூவிலைச் சூலம் திருத்தோளில் ஒளிகான்றது. வலத்திருக்கரத்தில் தமருகம் ஒலித்தது. பூமி செய்தவப் பயனால் பாததாமரை தாங்கியது. வயிரவர் திருச்செங்காட்டாங்குடி வந்து சேர்ந்தார். தீராத பெரும்பசி உடையார் போலச் சிறுத்தொண்டர் மனையை நாடி நடந்தார்.

"சிவனடியார்களுக்கு நாளும் சோறு உண்ணக் கொடுக்கும் தொண்டர் இருக்கின்றாரோ? "என்று வாயிலில் நின்று வினாவினர். "சிவனடியாரைத் தேடிப்புறத்தே போந்தார். எம் பெருமான் அகத்துள் எழுந்தருளுங்கள்." என்றுரைத்தார் தாதியார் சந்தனநங்கை. வயிரவப்பெருமானுடைய பாதங்களைப் பணிந்தார். "மாதரார் தாமிருந்த இடத்தில் யாம் புகுதோம்." உடனே திருவெண்காட்டம்மையார் விரைந்து வந்தார். "இன்று சிவனடியாரைக் காணாமையினால் தேடிச் சென்றார். இப்பொழுது வருவார். இல்லத்தில் எழுந்தருளுங்கள்." என்று பணிந்தார். "ஒப்பற்ற இல்லறம் பேணுவீர்காள்! யாம் வட தேசத்தோம். அவரின்றி யாம் இங்கிருக்க கில்லோம். என்று அருளிச் செய்த வயிரவர் பின்னரும் பகருவார். "நாம் கணபதீச்சரதில் வண்ணமலர் ஆத்தியின் கீழ் வதிவோம். சிறுத்தொண்டருக்கு எம்பரிசு உரைப்பீர். அண்ணலார் சென்று ஆத்தி மரவடியில் அமர்ந்தார். சற்று நேரத்தின் பின்பு சிறுத்தொண்டர் வந்தார் வயிரவருடைய பாதங்களைப் பணிந்தார். பரிவோடு ஒதுங்கி நின்றார்.

"நீரோ பெரிய சிறுத்தொண்டர்?

"சிவனடியார்கள் கருணையினால் என்னைத் தான் அழைப்பார்கள்....... சுவாமி அடியேன் மனையில் எழுந்தருளி அமுது செய்ய வேண்டும். "என்று அளவிறந்த அன்போடு கூறி அடியிற் பணிந்தார் சிறுத்தொண்டர். "சிறுத்தொண்ரே! யாம் உத்தராபதியோம். உம்மைக் காணும்படி வந்தோம். அன்புடன் எம்மை அமுது ஊட்ட முடியாது. அச்செயல் செயற்கரும் செய்கை." என்றார் வயிரவர். "அப்படிச் சொல்லத் தகாது, நான் பின் விளைவை முன் எண்ணாமல் இயம்பமாட்டேன். சிவனடியார்கள் கிடைக்கப் பெற்றால் செயற்கருஞ் செயல் மிகச் சுலபமாகும்." "யாம் ஆறு மாதங் கழித்து உணவு கொள்வோம். அதற்குரிய நாள் இன்றாகும்."

"அதுவும் நன்றே" "பசு வீழ்த்து அமுது படைத்துப்புசிப்போம்.

"நம்மிடத்தில் பசு ஆடு எருமை முந்நிரையும் இருக்கின்றன. இதில் அமுதுக்கு ஆம்பசு எதுவோ?

"யாம் உண்பது மானிடப்பசுவாகும். ஐந்து ஆண்டாக இருக்க வேண்டும். "இவ்வளவு தானா? என்று கேட்டார் சிறுத்தொண்டர். "மேனியில் ஊனம் இருப்பின் ஈனம் "மிக எளிது "குடிக்கு ஒரு சிறுவனாக வேண்டும். தந்தை தளராது அரிய வேண்டும். தாய் மகிழ்ந்து பிடிக்க வேண்டும். கலக்கம் இன்றிப் பாகம் பண்ணும் கறியோடு யாம் சோறு உண்போம்.

"சற்று நேரம் தாமதித்து இருங்கள்." என்று சிறுத்தொண்டர் வயிரவரிடத்தில் விடைபெற்று மனையில் வந்தார். திருவெண்காட்டமையாரிடல் வயிரவரின் விரத வைராக்கியத்தை எடுத்துரைத்தார்.

காதலர் இருவரும் கருத்து ஒருமித்து ஆலோசித்தார்கள். வயிரவர் அமுது செய்து அவர் மலர்ந்த முகம் காண வேண்டும். தம்மைக்காக்க அவதரித்த அருமணியை வயிரவருக்குக் கறியமுது ஆக்கச் சம்மதம் கொண்டார்கள்.

சிறுத்தொண்டர் பள்ளியிலிருந்து சீராளனைக் கூட்டி வந்தார். தாயார் வாயிலில் நின்று மைந்தரை மகிழ்ந்து வாங்கினார். சிறுத்தொண்டர் சற்றுக் கால தாமதத்தின் பின் மன மகிழ்வோடு வயிரவரிடத்தில் வந்தார். ''பெருமான் பசித்திருக்கக் காலம் தாழ்ந்தினேன். எனினும் தேவரீரின் பணி சமைத்தேன். என் எண்ணம் நிறைவாக எழுந்தருள வேண்டும். ''என்று வேண்டி நின்றார். ''பெருமை நிறைந்த தொண்டரே போவோம்.

சிறுத்தொண்டரின் மனையில் வயிர வருக்குத் திருவடி அர்ச்சனை செய்தார். பின்னர், ''அமுது படைக்கச் சம்மதம் தானே?'' எனக் கணவன் மனைவி இருவரும் வணங்கிக் கேட்டார்கள். ''சோற்றோடு கறியையும் சோத்துப் படையுங்கள் எனப் பதில் வந்தது. படையலைப் பார்த்து விட்டுப் பகருவார் வயிரவர்: ''யாம் சொன்ன பிரகாரம் சுவைபடச் சமைத்தீரோ? ''அவ்வறே சமைத்தோம். ''இங்கு நமக்குத் தனியாக உண்ண ஒண்ணாது. அடியாரை அழைத்து வருவீர்.

சிறுத்தொண்டர் விரைந்து சென்றார். வாட்டத்தோடு வந்து உரைப்பார்: ''எங்கு தேடியும் அடியாரைக் காணேன் யானும் உலகத்தில் திருநீறு அணிவாரைப் பார்த்து அணிவேன்.'' என்று கூறிப் பக்குவமாக வணங்கினார். ''உம்மைப் போல நீறிட்டார் உளரோ..... நீர் உண்பீர்'' என்ற வயிரவர், உண்கலம் ஒன்றில் சோறும் கறியும் படையும்'' என்று திருவெண் காட்டம்மையாருக்குப் பணித்தார். அம்மையார் அப்பணி ஆற்றினர். வயிரவர் பெருமானை அமுது ஊட்டக் கருதினர். சிறுதொண்டர் தாம் முன் உண்ண முயன்றார்.

''யாம் ஆறுமாதங் கடந்து உண்போம். நாளும் சோறு உண்பீர். முன் உண்ணாதீர்.'' என்று தடுத்தார். ''நம்மோடு உண்பதற்குச் சீரார்ந்த மகவு பெற்றீரேல் அழையும்'' என்றார்.

''அவன் இப்போது உதவமாட்டான்.

''அவன் வந்து தான் யாம் உண்போம். அழையும்

''மைந்தா வருவாய்'' என்று சிறுத்தொண்டர் புறத்தே வந்து அழைத்தார். வெண்காட்டம்மையும் உடன் வந்தார்.

''செய்ய மணியே! சீராளா! வருவாய். சிவனடியார் யாம் உய்ய உடன் உண்ண அழைக்கின்றார்'' என ஓலமிட்டார்.

சிவபிரான் திருவருளால் சீராளன் ஒப்பற்ற அழகோடு ஓடிவந்தான். சிவனடியார் உண்ணப் பெற்றோம் என்று பெற்றோர் பேருவகை உற்றார். உள்ளே ஓடி வந்தார்கள்.

வயிரவரைக் கண்டிலர். கலத்தில் அமுது காணார். கலங்கினர்... கருத்தழிந்தார்... கதறினார்.

தனிவெள்ளை இடபத்தின் மேலாக மலையரசன் மகள் தனிவேற்பெம்மான் எம்பெருமானுமாகக் காட்சி தந்தார். பிறைசூடிப் பெருமான் பேரருள் புரிந்தார்.

அன்பினால் வென்ற சிறுத்தொண்டர், திருவெண்காட்டம்மையார், சீராளர் முன்தோன்றும் பெருவாழ்வு கண்டு பேரின்பம் உற்றார்.

கைதொழுதார். காதலித்து ஏத்தினார். எம்பெருமான் திருவடித் தாமரைக் கீழ் வணங்கும் தொண்டரையும் மனைவியாரையும் மகனாரையும் தாதியாரையும் என்றும் நீங்காது வணங்கி இருப்பதற்கு உடன் அழைத்துக் கொண்டு எழுந்தருளிச் சென்றார்.

*''கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்*
*வென்றி நெடுவேன் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்*
*நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்*
*என்றும் பிரியா தேயிறைஞ்சி யிருக்க வுடன்கொண் டேகினார்*

(சிறு - புரா - 87)

# நவக்கிரக வழிபாடு நலிவை அகற்றுமா?

- 'சித்தாந்தரத்தினம்' க. கணேசலிங்கம் -

சுந்தரமூர்த்தி நாயனார் ஒருமுறை கண்களை இழந்து கலங்கினார். எடுத்ததற்கெல்லாம் வீட்டிலுள்ள வரை நாட வேண்டிய நிலை. ஒளி இழந்தவுடன் ஓடி வந்து உதவிய வீட்டுப் பெண்கள் நாளாக நாளாக உதாசீனம் செய்கிறார்களோ என்று எண்ணத் தோன்றியது. சில வேளைகளிற் "குருடா அழைக்க வேண்டாம்" என்று கூடப் பதில் வந்தது. விழி போனபின் ஒரு வாழ்வா? உள்ளம் குமுறியது.

தோழனாக வந்த ஈசனல்லவா கண்களைப் பறித்துக் கொண்டான். ஆத்திரத்தில் வார்த்தைகளை அளந்து பேச முடியுமா? "நீ எனக்குச் சனியாக வந்தாயே" என்று ஈசனை வைகிறார் சுந்தரர். "மகத்தில் புக்கதோர் சனி எனக்கானாய்" என்பது அவரின் வார்த்தைகள். அடுத்த கணம் இப்படிப் பேசிவிட்டோமே என்று எண்ணிக் கலங்குகிறார். சிறிது தடுமாற்றத்துடன் "மைந்தனே, மணியே, மணவாளா" என்ற சொற்கள் வெளிவருகின்றன. அமைதியடைந்து, தனது ஆற்றாமையைக் கூறி அழுகிறார். முகத்தில் கண்ணிழந்து எப்படி வாழ்வேன்" எனக் கேட்டு முறையிடுகிறார்.

*"மகத்தில் புக்கதோர் சனியெனக் கானாய்*
*மைந்த னேமணி யேமண வாளா*
*அகத்தில் பெண்டுகள் நானொன்று சொன்னால்*
*அழையேல் போகுரு டாஎனத் தரியேன்*
*முகத்தில் கண்ணிழந் தெங்கனம் வாழ்வேன்*
*முக்க ணாமுறை யோமறை யோதீ*
*உகைக்குந் தண்கடல் ஊதம்வந் துலவும்*
*ஒற்றி யூர்எனும் ஊருறை வோனே"*

மக நட்சத்திரம் சிங்கராசிக் குரியது. இதில் சனி வரும் பொழுது நாட்டுக்குப் பெருங்கேடு விளையுமென்பது சோதிட நம்பிக்கை. சுந்தரருக்கும் சோதிடத்தில் நம்பிக்கை யிருந்ததென்பதை அவரின் பாடல் உணர்த்துகிறது.

பழங்காலந்தொட்டே சோதிடக்கலை பல நாடுகளிற் போற்றப்பட்டு வருகிறது. எதிர்கால நிகழ்வுகளை அறியச் சோதிடம் ஓரளவு துணைபுரிகிறது. சோதிடத்தின் துணைகொண்டு வாழ்வில் வெற்றி பெற வேந்தரும் விழைந்தனர். மக்களுக்குச் சோதிடத்தில் ஏற்பட்ட நம்பிக்கை பல வேளைகளில் மூட நம்பிக்கையாக மாறியதுண்டு.

கிரகங்களின் நிலைக்கேற்க இயற்கையிலும் வாழ்விலும் சில தாக்கங்கள் ஏற்படுகின்றன. அமாவாசை, பூரணை, அட்டமி முதலிய திதிகளிற் கடல் பொங்குவதும், மனப் பெலவீனமுள்ளவர் பாதிக்கப்படுவதும், இவை போன்ற பிற நிகழ்ச்சிகளும் பலர் அறிந்ததே. ஆயினும் வாழ்வில் ஏற்படும் பாதிப்புக்கள் அனைத்திற்கும் கிரகங்கள் காரணமாகுமா? அவற்றைத் தொழுவதால் தொடர்கின்ற இடர்களைத் தடுக்க முடியுமா? இத்தகைய கேள்விகள் எழுகின்றன.

அறிவியல் உலகம் "இல்லை" என்றே இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றது. சைவசித்தாந்தம் அறிவியல் சார்ந்த ஒரு தத்துவம். இத்தத்துவத்தைக் கொண்ட சைவசமயம் நவக்கிரக வழிபாட்டை வலியுறுத்துகிறதா? இதனைச் சிந்தித்து விடைகாண்பது பயனுள்ளது.

பண்டைத் தமிழர்கள் சோதிடத்தை அறிந்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஆனால், பழைய கோயில்களில் நவக்கிரக வடிவங்கள் இல்லை. அப்படி இருப்பின் அவை பின்னாளில் வந்தவையே. இதனால் நவக்கிரக வழிபாடு முன்னாளில் இல்லையென்று கருத வேண்டியுள்ளது.

கிரகங்கள் குறித்துச் சமய குரவர்களும் பிற அருளாளரும் பாடி இருப்பினும், அவற்றை வழிபட வேண்டுமென்ற கருத்து அவர்கள் பாடலிலே இல்லை. ஞானசம்பந்தப் பெருமானின் கோளறு பதிகத்தைக் காட்டி, நவக்கிரக வழிபாட்டை அறிஞர்கள் கூட வலியுறுத்துகிறார்கள். அப்பதிகத்தின் முதற்பாடல் வருமாறு.

*வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்*
*மிக நல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்*
*னுளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி*
*சனிபாம்பிரண்டும் உடனே*
*ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல*
*அடியா ரவர்க்கு மிகவே.*

அம்மையப்பராக இருக்கும் சிவபெருமான் உள்ளத்தில் இருப்பதனால், ஞாயிறு, திங்கள் ஆகிய கிரகங்கள் அடியவருக்குத் தீங்கு செய்யாமல் நல்லனவாக அமையும் என்பதே இப்பாடல் கூறுவது. இதனால் நவக்கிரககங்களை வழிபடுவது தேவையற்ற தென்பதும், சிவனை வழிபடுவது ஒன்றே வேண்டத்தக்கது என்பதும் பெறப்படுகிறது.

ஞாயிறும் திங்களும் உலகிற்கு நன்மை பயக்கின்றன. இதனால் "ஞாயிறு போற்றுதும்" என்று இலக்கியங்கள் பகர்கின்றன. அறுவடை முடிந்தபின் புத்தரிசி பொங்கி ஞாயிற்றுக்குப் படைத்துப் போற்றுவது தமிழர் வழக்கம். இது எமது நன்றியைக் காட்டும் பண்பு. உண்மையில் கிரகங்கள் சடப்பொருட்கள். அவற்றின் இயக்கத்தில் சில நன்மைகள் கிட்டுகின்றன. இறைவனே அவற்றை உள்நின்று இயக்குகிறான். நாம் கிரகங்களை வழிபடுவதென்பது அவற்றை உள்நின்று இயக்கும் இறைவனை வழிபடுவதாக இருக்க வேண்டும்.

நாம் செய்த நல்வினை தீவினைக் கேற்ப அவற்றின் பலன்கள் புண்ணிய பாவப் பதிவுகளாக எம்மைத் தொடர்கின்றன. பிறவிகள் தோறும் இவை எம்மைத் தொடர்கின்றன. இவை பிறவிகள் தோறும் எம்மைப் பிணித்துக் கட்டாக அமைகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் இதனை "அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி" என்று விளங்குகிறார். (அறம் – புண்ணியம்). உரிய காலத்தில் இந்தப் புண்ணிய பாவப் பதிவுகள் பலனுக்கு வந்து எமக்கு இன்பதுன்ப அனுபவங்களாக மாறுகின்றன. ஒருவித நியதிக்குட்பட்டு நடப்பவை இவைகள். இவற்றைக் கிரகநிலையின் அடிப்படையில் ஓரளவு ஊகித்து அறியலாம். கிரகங்களே நிகழ்வுகளுக்குக் காரணமல்ல. சோதிடத்தின் படியும் இதுவே உண்மை. "எப்பவோ முடிந்த காரியம்" எனினும் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் கூற்று சிந்தனைக்குரியது. கிரகங்கள் காட்டும் இடர்களை அறுப்பதற்குச் சிவபெருமானை உள்ளத்திருத்தி வழிபடுவதே வழி.

எமது வினைப்பலனை நாம் அனுபவித்துத் தீர்க்க வேண்டுமென்பது பொதுவான நியதி. இது சைவ சித்தாந்தம் உட்பட இந்திய தத்துவங்கள் பலதிற்கும் உடன்பாடான கொள்கை. ஆயினும் இறை அருளால் எந்த நியதியையும் மாற்றலாம் என்று செய்து காட்டியவர்கள் ஞானசம்பந்தப் பெருமான் போன்ற அருளாளர்கள். "இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உனதடி தொழுதெழுவேன்" உறுதியான இறை நம்பிக்கையுடன் பாடிப்பய னடைந்தவர்கள்

இவர்கள். கிரகங்களை வழிபட்டு வாணாளை வீணாளாக்காமல்,அசையாத நம்பிக்கையுடன் அவற்றையும் இயக்கும் இறைவனை வழிபட்டுக் கருதியதெல்லாம் பெற்றார்கள்.

வாழ்வில் நலிவுற்றுப் பற்பல பிழைகளால் துவண்டு, இறப்பதே மேலென்று எண்ணிச் சோர்ந்தவர் அருணகிரிநாதர். முருகனருளால் குறைகள் எல்லாம் நீங்கிய இவ்வருளாளர் கந்தன் திருவுருவம் கண்முன் தோன்றிடில் நாளும் கோளும் கூற்றும் வினைப்பயனும் என்ன செய்ய முடியுமெனக் கேட்கிறார்.

*"நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த*
*கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கு மரேசரிரு*
*தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்*
*தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே"*

- கந்தரலங்காரம்-.

சைவர்களாகிய நாம் எமது சமயக் கொள்கையின் சிறப்பை உணர்வதில்லை. அறிவியல் தத்துவமான சைவ சித்தாந்தத்தை அறிய விரும்புவதில்லை. சைவ நாயன்மார்கள் காட்டிய வழியைப் பின்பற்றுவதில்லை. 'அஞ்சுவதுமில்லை, அஞ்ச வருவதுமில்லை' என்று கூறிய அவர்களின் பற்றற்ற துணிவும், இறைவழி நின்று எதனையும் வெல்லலாம் என்ற நம்பிக்கையும் எமக்கு வர வேண்டும். அவர்களின் வாக்கையும் வாழ்வையும் படித்துப் பயன்பெறாமல் கிரகங்களுக்குப் பயந்து இறைவனிலும் மேலான இடத்தை அவற்றுக்குக் கொடுத்துஎம்மை இழிவுபடுத்துகின்றோம். தவறான அறிவை அறிவுடைமையாகப் பலர் கருதுகின்றனர். சனிக் கிரகத்திற்குப் பயப்படுவதுபோல் வேறெதற்கும் இவர்கள் பயப்படுவதில்லை.

தமிழகத்திலுள்ள திருநள்ளாறு என்ற கோயிலுக்குச் சென்று அங்குள்ள சனீஸ்வரனை வழிபடுவதை முக்கியமாகக் கருதுபவர்கள், அது குறித்த வரலாற்றை அறியாதவர்களாக இருக்கிறார்கள். (சனீஸ்வரன் என்ற சொல்லே தவறானது. சூரியனுக்கும் சாயாதேவிக்கும் பிறந்து, கால் ஊனமுற்று மெதுவாக நடப்பதால் "சனைஸ்சரன்" என்று வந்த பெயர் பின் சனீஸ்வரன் ஆனது.)

முன்னொரு முறை நிடதநாட்டு மன்னனான நளன் சனி பிடித்ததனாற் பல துன்பங்களை அடைந்தான். பாரத்துவாச முனிவரின் அறிவுறுத்தலின் படி திருநள்ளாறு சென்று, அங்குள்ள தீர்த்தத்தில் நீராடித், திருநீறணிந்து, திருவைந்தெழுத்தை ஓதியபடி சிவதரிசனம் பெறத் திருக்கோயிலினுள் சென்ற போது, சனி பயந்து அவனைப் பிரிந்து கோபுர வாசலில் நின்றது. கோபுர வாசலின் வடக்கே இன்றும் நிற்கும் சனிக்கிரகம் இப்புராணக் கதையை நினைவூட்டுகிறது. ஈசனை வணங்கி சனியின் பிடியிலிருந்து விலகியவன் நளன். ஈசனை மறந்து சனியை வணங்கும் அன்பரைவிட்டுச் சனி விலகுமா ?

எந்தச் சமயத்தவரும் தமது சமயக் கொள்கையை அறிந்து அதன்வழி நடத்தல் பயனுள்ளது. சைவ மக்களின் இன்றைய நிலை கவலையளிப்பதாக உள்ளது. சைவத்துக்கு உடமையற்ற பிறதெய்வங்களையும் தனிமனிதரையும் வணங்குவதிற் காலத்தைக் கடத்துகின்றனர். நாளையும் கோளையும் நம்பித் தவறான வழியிற் செல்கின்றனர். இவற்றை விடுத்துச் சிவ சிந்தனையை வளர்த்துப் பயனடைய வேண்டும்.

மண்ணுலக வாழ்வு நலமாகவும், நல்லகதி கிடைக்கவும், கருதியது கிட்டவும் அம்மையப்பராக விளங்கும் சிவபெருமானை வழிபடுதலே வேண்டத் தக்கது. இதனை வலியுறுத்தும் சம்பந்தர் தேவாரம் என்றென்றும் படித்துப் பயன் பெறவேண்டிய தொன்று.

*"மண்ணில்நல வண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை*
*கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்*
*பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே."*

# மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆனவன்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

சாதாரண, எமது உலகியல் வாழ்வில் ''நாலுபேர் சொல்லுகிறபடி நட'' என்பதொரு உபயோகம் உண்டு. அந்த நால்வர் யார் என்பது தெளிவாக வேண்டும். இனிய சுபாவம் உடையோர்; அன்புள்ளங் கொண்டோர்; அடக்கமுடையோர்; பெரியோரைக் கனம் பண்ணுவோர்; ஒழுக்க சீலர்; சான்றோர் என்று அவர்கள் குணாதிசையங்களைக் குறியீடாக்கியே அமைதி காண முடியும். நால்வர் – நல்லவர்கள் நால்வர்; இங்கே எமது சமய குரவர்களை எண்ண வைக்கின்றது. நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் காட்டிய நெறியே நம்வழி. திருமுறைச் செல்வங்கள் அவ்வழியின் விளக்கமாகி நிற்கின்றன. சைவர்கள் நால்வர் காட்டிய வழி நடப்பவர்கள் என்ற உபயோகமே இந்தக் கருத்தை வலுவுடைய தாக்குகின்றது.

திருமுறைகள் வாழ்வின் விளக்கமாய தத்துவங்கள். அவற்றை வாழ்வியல் மந்திரமென்றுந் துணிய முடிகின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்,

*மந்திர நான்மறை யாகி வானவர்*
*சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன*
*செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்*
*கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே.*

என்னுந் தேவாரத்தில் திருவைந்தெழுத்து மந்திரம் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். அங்கே மந்திர நான்மறையாகி நின்றவர் என்னும் பகுதியாற் குறிப்பிடப்படுபவர் சிவன் என்பதும், சிவன்தான் மந்திரம் என்பதும் பெறப்படுகின்றது. அவரை ஆள்வன ஐந்தெழுத்தெனவே அந்தணர்க்கு அவை மந்திரமாயின. இத் திருப்பாடலை உடைய பஞ்சாக்கரத்திருப்பதிகத்து இறுதியிலே,

*''.................. காழியர் மன்ன னுன்னிய*
*அற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்*
*துற்றன வல்லவ ரும்ப ராவரே''.*

என்னுங் கருத்தைக் காணுகின்றோம். திருஞான சம்பந்த மூர்த்தியார் திருப் பதிகங்களின் இறுதியில் இப்படியான கருத்து ஒளிர்வதைப் பெரும் பான்மையாகக் காணுகின்றோம். எனவே இவை மந்திரங்கள் தாமென்பது உறுதி. இக்கருத்தை மேலும் உறுதி செய்வது போன்று அப்பர், சுந்தரர், தேவாரத் திருப்பதிகங்களிலும் செய்திகளைக் காணுகின்றோம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லியருளிய நமச்சிவாயத் திருப்பதிகத்தின் பத்தாவது பாடல் இறுதியில்

''..........................................
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்ட னூரன் சொல்லிவை
சொல்லுவார்க் கில்லைத் துன்பமே''

என்று குறிப்பிடப்படுகின்றது.

இவற்றுக்கப்பால், பூட்டப்பட்டிருந்த கதவைத் திறந்ததும், திறந்திருந்த கதவம் பூட்டப்பட்டதும், விடத்தினால் இறந்த வணிகன் உயிர் பெற்றெழுந்ததும், ஆற்றிலிட்ட ஓலை எதிரேறிச் சென்றதும், நீற்றறை இன்பந்தரு பொய்கைக் கரையானதும், முதலையுண்ட பாலனை மீட்டதும் தேவாரத் திருநெறிய தமிழ் என்பது யாம் அறிந்ததுதான். அவையெல்லாம் வல்லமை புலப்படக்கூடிய வகை அமைந்து மந்திரங்கள் ஆயினவென உணருகின்றோம். திருநெறிய தமிழ், மந்திரமாம்.

இவை போதந் தருபவை. போதம் – ஞானம். சிவனைப்பற்றிப் பேசுகின்ற – சிவனாகி நிற்கின்ற திருமுறைகள் மேலான அறிவைத் தருபவை.

"ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி............"

என்பர் சம்பந்தர். ஊனில் உயிர்ப்பை ஒடுக்குதல், ஞான விளக்கினை ஏற்றுதல் உயிர்த் தொழிலாக முடியாதென்பது கொண்டு சிவன் தொழிலாகக் காண்கின்றோம்.

"மலையி னிடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ"

என்பது அப்பர் சுவாமிகள் தேவாரப் பகுதி.

"பொன்னு மெய்ப் பொருளுந் தருவானை"

என்பது சுந்தரர் தருஞ் செய்தி. மெய்ப்பொருள் – உண்மைப் பொருள்; என்றது ஞானஉணர்வு, இறையுணர்வு.

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

என்னும் மாணிக்கவாசக சுவாமிகளின் சொல் போதந் தருபவன் அவன் என்பதைத் தெளிவாக்குகின்றது. மற்றோரிடத்துத் திருப்பள்ளி எழுச்சியில்,

"யாவரு மறிவரியாயெமக் கெளியாய்"

என்று குறிப்பிடுவது கொண்டு அறிவே உருவாகிச் சுவாமிகள் இடமாகி இறைவன் உணர்த்துகின்றான் என்பது புலனாகின்றது.

அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்
உருவும் உடையா னுளன்.

என்பது திருவருட்பயன்.

தந்திரம் – நூல், உபாயம் என்னுங் கருத்துக்களை உடையது. நூலறிவு உபாயத்திற்கு மூலம். எனவே கருத்துத் தொடர்புள்ளவை. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே" என்று அப்பர் சுவாமிகள் கூறுவது அறிவுடனாகிய கருத்தெனினும் தந்திரத்துட் பொதிவையுடையது. வேண்டப்படாததாகிய பிறவியை வேண்டப்படு வதாகக் கருத வைப்பது தந்திரந்தான். இறையுணர்வுடன் கூடிய வார்த்தை என்பதால் இதனைத் தந்திர மென்றோம்.

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப் புச்சிவம்
வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன்
மன்னு திருப்பெருந் துறைஇறைதான்
பூண்டேன் புறம்போ கேனினிப்
புறம்போகலொட் டேனே.

என்னுந் திருவாசகத் திருப்பாடல் மற்றோர் தந்திரக் காட்சியாகின்றது. வேண்டத்தக்க தறிவோய் நீ" என்று கூறிய ஆசிரியர் இந்த வகை சொல்லு கின்றார்கள். இல்லை; இறைவனே சொல்ல வைக்கின்றான். சிவம் வேண்டார்தமை நாளும் தீண்டேன்" என்னுந் தொடர் எமது சிந்தனைக்கு ஊட்டமாகின்றது.

மற்று, இறைவன், மருந்தாகின்றான் என்பது ஒன்று. "சிவஞ் சிவம் என்றிடத் தீவினை மாளும்" என்பது திருமந்திரம்;

"திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்........"
"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

என்பன பதினோராந் திருமுறையிற் காணப்படுவன.

"அருத்தம தாவதுநீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு"

"வெந்துயர் தீர்ப்பது நீறு"
நீறு – சிவம்

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையினுந்துணை யஞ்சுழுத்துமே.

திருவைந்தெழுத்து – சிவம்.

மந்திரமாகி, உயர்ஞானப் பெருமதியோடு உபாயமாகி, மருந்துமாய் நிற்கும் இறைவனை வழுத்தி மனதில் நிறைப்போம். அவன் வழிச் செல்வோம்.

# சிவனடியார் சீர்பரவுவார்

- சைவப்புலவர், கலைமாமணி பொன். தெய்வேந்திரன் -

*ஓய்வு பெற்ற கல்விச் சேவை அதிகாரி*

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே" என்று மணிவாசகர் பரம்பொருளைப் புகழ்ந்தார். பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணானந்தப் பொருளை, வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி இருப்பதும் பரமனே என்றும், அவனையே செல்வமே சிவபெருமானே, சிவபுரத்து அரசே என்றும், வாயார வாழ்த்தி, போற்றி, புகழ்ந்து மகிழ்ந்தவர்கள், பரமுத்தி பெற விழைந்த, சீவன் முத்தர் நிலை கண்ட சிவனருட்ட செல்வர்களாகிய சிவனடியார்கள். பார்புகழும் சீர் பெற்ற சிவனடியார். மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் என்ற உண்மையை மக்களுக்கு எடுத்துக் காட்டிய மகாமேதைகள். கார் மேகம் கண்டாடும் மயில்போல் கூர்மதியாற் கூத்தபிரானைக் கொண்டாடிய சிவனடியார்கள், இப்பாரினில் சீர்பெற்று விளங்குகிறார்கள். ஆகையால் அவர்கள் அரனின் ஆர்வலர்கள் மாத்திரமன்றிக் காவலர்களாகவும் விளங்கு கிறார்கள். "தெய்வம் தொழுமின்; தொழுதோர்ப் பேணுமின்" என்பது சிலம்பு. எனவே சிவனடியார் சீர்பரவுவார் என்று சிந்திப்பதும் வந்திப்பதும் சைவசமயிகளின் தலையாய கடனாகும்.

திருவருட் செல்வர்களாகிய சிவனேயச் செல்வர்கள் அன்பையும், அறத்தையும், அருளையும் பெற்றவர்கள், நல்லவர்கள் வல்லவர்கள். உயிர்கள் இருவகை. ஒன்று சாதாரண உயிர். மற்றது உத்தம உயிர். பெரியபுராணம் தந்த திருமுறைச் செம்மல் சேக்கிழாரடிகளின் புராணத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தவரே தில்லையம்பலவன். "உலககெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" இறைவன் என்பதைத்துறை போகக் காட்டியுள்ளான். எனவே ஓதக் கூடியவை உயிர்கள். ஆனால் உணர்ந்து ஓதக் கூடியவை உத்தம உயிர்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லியுமுள்ளார். உணர்ந்து ஓதி மனத்தை வென்றவர்களே சிவனடியார்கள். பெரியபுராணம் காட்டும் நாயன்மார்கள் "வேண்டாமை" என்ற விழுச் செல்வத்தைப் படைத்தவர்கள். ஈரமும், வீரமும்; வாரமும் ஒருங்கேயுடையவர்கள். தொண்டர்தம் பெருமை பேசுவது பெரியபுராணம். ஆடவல்லானின் அருட் திருவிளையாடல்கள் பற்றிப் பேசும் திருவிளையாடற் புராணம். இவ்விரண்டிலும் சிவஞான போதச் சிந்தனைகள் நிரம்பியுள்ளன. இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) (கடவுள் உயிர் உலகு) ஆகிய மூன்றின் தன்மையை உணர்ந்து நன்மை பெற்றவர்கள் வரலாறுகள் மூலம், பேரின்ப ஆறு பெருக்கெடுத்தோடும் வழிவகைகளையும் உயிர்கள் உணரவைக்கின்றது. அறுபத்து மூவர் வரலாறுகளில் பல் திறத்தோரின் வாழ்வு நலமும், அறநலமும், அன்பு நலமும், தார்வேந்தராயினும்; கார் காத்த வேளாண் குடியினராயினும், உழுதுண்டு பழுதின்றி வாழ்ந்தவராயினும், வணிகராயினும், கணிகையர் குடிப்பிறந்தா ராயினும், எத்தொழில் புரிந்தவராயினும், பத்தராய்ப்பணிந்து, திருநீறு பூசி, சித்தத்தைச் சிவன் பால் வைத்துப் பரமனையே பாடி,

முத்தொழில் நடாத்தும் முதல்வன் பாத கமலங்களை தங்கள் பாதக மலங்கள் அற்றுப் போகப் பற்றிப் பிடித்த வரலாறுகளே காணக் கூடியதாக இருக்கின்றது. தொகையடியார்கள் ஒன்பதின்மரும் தனியடியார் அறுபத்து மூவர் வகையாதலின் தொகையடியார்கள் ஆயினர்.

இறைவனும் ஆன்மாவும் ஒன்றா வேறா என்று சகலர் மனதில் நிறைவாகாத விடைக்காக ஓர் ஆவல். இதற்கு சைவம் முழுநிறைவான விடையைத் தடையின்றித் தருகிறது. இறைவன் ஆன்மாவுடன் ஒன்றாயும் (அத்துவிதம்) வேறாயும் துவிதம் உடனாயும் இருக்கின்றான் என்பதேயாகும். ஆன்மா மூவகை மும்மலம் கொண்டவை சகலர் இருமலமுடையவை பிரளயாகலர். ஒரு மலம் உடையவர் விஞ்ஞான கலர் எனப்படுவர். மும்மலம் உடைய ஆன்மாக்களுக்கு "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாகவும், இருமலமுடையவர்க்கு "நிலாவுலாவிய நீர்மலி வேணியனா"கவும், ஒரு மலமுடையார்க்கு "அலகில் சோதியனாகவும்" இறைவன் காட்சி தருவார். உறவு எனும் கோலை நட்டு உணர்வு எனும் கயிற்றினாலே முறுக வாங்கிக் கடைய இறைவன் முன் நிற்பான் என்பதும் அப்பர்வாக்கு. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால் வகைப்பதங்களையும் உணர்ந்து தெளிந்தவர்களே இந்த சிவனடியாகள் ஐம்புலன்களையும் அகத்தடக்கி வென்ற அரசர்கள். திருவிளையாடற் புராண பாயிரத்தில் அடியவர் மாண்பை இவ்வாறு ஆசிரியர் கூறுகின்றார்.

*"வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுணர் உள்ளம் தோறும்*
*சென்றுளே அமுதம் ஊற்றும் திருவருள் போற்றி, ஏற்றுக்*
*குன்றுளே இருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி*
*மன்றுளே மாறியாடு மறைச் சிலம் படிகள் போற்றி"*

"மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய" என்பது திருவாசகம் புலன்களை வென்ற திருநீலகண்டரையும் நாம் காணுகிறோம். ஆகவே ஆரம்பத்தில் கண்ட அன்பை நோக்கும் போது "அன்புறு பத்திவித்தி யார்வநீர் பாய்ச்சும் தொண்டர்க்கு" எனும் திருவிளையாடற் புராணக்கருத்தோடு, நாவுக்கரசரை நினைக்கும் போது, மெய்மையாம் உழவைச் செய்தல், விருப்பெனும் வித்தை வித்தல், பொய்மையாம் களையை வாங்கல், பொறுமையெனும் நீரைப் பாய்ச்சல், தம்மையும் நோக்கிக் காண்டல், தகவு என்னும் வேலியிடுதல், செம்மையுள் நிற்றல் ஆகியவற்றின் பயனாகச் சிவகதி விளையும் என்கிறார். திண்மையான அனுபவ முடிவே இது.

அன்புறு பத்தி யார்வத்துடனேயே அடியவர்கள் தங்கள் சிந்தனையையும் சிந்தனையில் எழுந்த செயல்களையும் வெளிக் கொணர்ந்தனர். கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டாம் என்ற வித்தகர்கள். இதனாலன்றோ கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் என்றார் அடியார். "அன்பின் வழியது உயிர் நிலை" "அன்பெனும் நார்தொடுத்து" "இடையறாப் பேரன்பு" என்பது போன்ற வரிகளாற் சீர்பெற்ற அடியவரின் குணநலன் வெளிப்படுகின்றது. தருமத்தை நிலைநாட்ட வந்த மனுநீதிக்கு முதல்வன் முக்கண்ணையும் காட்டினான் என்பது புராணம். ஞானசம்பந்தப் பெருமான் "எனதுரை தனதுரை" யாக மொழிந்த வரிகள் அன்பின் வெளிப்பாடே. மனித நேயத்தையும், நஞ்சுஇறக்கி, வாசிதீரக் காசுபெற்று, பையவே என்று பாண்டியற்காகவே, எலும்பைப் பெண்ணாக்கி, சிவ ஜோதியில் அடியவர்களை புகச் செய்த மேன்மையால் உணர முடிகிறது. அறத்தின் வெளிப்பாடாக வாசிதீரக் காசு பெற்றார். இம்மையே தரும் சோறும்

கூறையும் இறைவனிடத்தில் பெறலாம் எனக் காட்டியவர்களும் சித்தத்தைச் சிவன்பால் வைத்த நாயன்மார்களே. பண்ணிய புண்ணியத்தின் கண்ணியத்தால், தவம் பெருக்கவும், பேதமை தீர்க்கவும், சிந்தை திருந்தவும், மருந்தென மந்திர யந்திர வழிகளைக் காட்டிச், சிவன் பெருமையின் அருமையை ஒருமையுடன் நினதடி வழிபாட்டால் என்ன பெறலாம் என்பதையும், அரன் பால் இறவாத இன்ப அன்பின் முடிவையும், துறைபோகக் காட்டிய பெருமை சிவனடியார்களையே சாரும். திருத்தொண்டர் புராணமே ஓர் அருள் நூல், தூக்கு சீர்திருத்தொண்டத் தொகை விரிவாக்கி யுள்ளநூல் தன்ஞான பார்வையில் அஞ்ஞான இருளகற்றி மெஞ்ஞான ஒளி பெற்ற, சம்பந்தர், அப்பர், அப்பூதியடிகள், செந்தமிழ் பாடிய சுந்தரர், இல்லை யென்னாத இயற்பகை நாயனார், அன்னம் பாலித்த இளையான் குடி, மெய்ப் பொருள் கண்ட மெய்ப்பொருள் நாயனார், மழுமுனையில் மாதவம் செய்த எறிபத்தர், திருநீற்றுக் காகதியாகம் செய்த ஏனாதி, அன்பு வயப்பட வேடர், உருத்திரம் சொல்லி உருகியவர், சண்டிபதம் பெற்ற விசாரசருமர், மதம் காத்த மந்திரிகுலச் சிறை, கண்பெற்ற புண்ணியன், பிள்ளைக் கறிசமைத்த சிறுத் தொண்டர், கல் லெறிந்து காதல் கொண்டவர், கொலை செய்து நிலை பெற்ற கோட்புலி இப்படி எண்ணிலடங்கா அடியாவர் மாண்பு சொல்லில் அடங்கா, என அள்ளி அருளமுதமாகத்தந்த செம்மல் சேக்கிழாரடிகளே.

மாலறியா நான்முகனும் காணாத மலையும், ஆதியும்மந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாகிய சோதிநாதனைப் பரவியதும் இப்பூமியிலே, எனவே இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு என்று தேறி மலரவன் ஆசைப்படவும் திருமால் பெருவிருப் பெய்தவும் வைத்தது இத்தெய்வச்சிவனடியார் மாட்சியும் அதன் பால் அவர்கள் பெற்ற பரம்பொருளின் காட்சியுமேயாகும். குரு, இலிங்க சங்கம வழிபாட்டின் தத்துவம் இதனால் உணரப் பெறுகிறது. பத்தியென்பது அன்பு காட்டுவதேயாகும். "பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்றார் மணிவாசகர். அவரே அன்பினால் அடியேன் ஆவியே டாக்கையையும் அர்ப்பணிக்கமுன் வந்தார். தொகையடியார் பத்தராய்ப் பரமனைப் பணிந்தவர்கள். பத்தராய்ப் பணிவார்கள் என்போர் சிவநேயச் செல்வர்களை, தாய்ப் பசுவைக் கண்டசேய் போல, உள்ளம் உருகி, கள்ளம் அற்று, அன்பு வெள்ளம் பெருக்கி, தெள்ளத் தெளிந்த நிலையில், கண்ணும் கருத்தும் குளிர இன்ப அன்பு மிளிர வழிபடுவர். திருவருட் செல்வர்களை அவர்களை மனம் கனிந்து, பணிந்து வழிபடும் நனிசிறந்த சிவனடியார்கள், அரஹர என்று வாழ்த்தும் தன்மையார், இவர்கள் பிறவா நெறிபெற்ற புகழுடையவர்கள். சிவனடியார் சீர்பரவுதலே பார்புகழும் பரமன் பாதங்களைக் காட்டும்.

*"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்*
*மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்*
*மன்றாடும் மலர்ப்பாதம் ஒரு காலும் மறவாமை*
*குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்"*

" சிவ சிவ "

# வன்னிப்பிரதேசச் சைவஆலய வழிபாட்டு மரபு

--முல்லைமணி-

வன்னிப்பிரதேசம் மிகவும் பரந்து விரிந்திருக்கும் நிலப்பரப்பாகும். இன்றைய கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வவுனயா, புத்தளம், திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப பெரு நிலபரப்பின் வழிபாட்டு மரபினை இச் சிறுகட்டுரையில் எடுத்துக் கூறுவது சிரமமான பணியாகும். இப்பிரதேசத்தின் புவியியல் அமைப்பு, மக்களின் வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள், தொழில்கள், தேவைகள், மனப்பாங்கு என்பவற்றிற்கேற்ப வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பெரும்பான்மையானோர் விவசாயிகள். காடுசார்ந்த முல்லை, நிலமும் வயல் சார்ந்த மரு-தநிலமும், கடல்சார்ந்த நெய்தல் நிலமும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் வழிபாட்டு மரபினையும் நிர்ணயிக்கின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலந் தொடக்கம் சிவவழிபாடு இங்கு நிலவியதற்குச் சான்றுண்டு. அம்மன், ஐயனார், நாகதம்பிரான் வழிபாடும் இங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றன.

இங்குள்ள ஆலயங்களை தேசத்துக் கோயில்கள், ஊர்க் கோயில்கள் என இருவகையாகப் பாகுபாடு செய்யலாம். ஓர் ஆலயம் குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் இருந்த போதும் ஈழத்தின் பல் வேறுபகுதிகளிலும் வாழும் மக்களின் வழிபாட்டுத் தலமாக மிளிரும் போது அதைத் தேசத்துக் கோயில் எனலாம்.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன், புதூர் நாகதம்பிரான், சடவங்குளத்து ஐயன் போன்றவை தேசத்துக் கோவில்களாகும்.

## விநாயகர் வழிபாடு

வன்னிப்பிரதேசத்தில் விநாயகர், மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய தெய்வமாகும். விநாயகர் விவசாயத்திற்கும் கல்விக்கும் உரிய தெய்வமாகக் கருதப்படுகின்றார். ஆகம முறைப்படி அமைந்த கோயில்களில் தெய்மாகக் கருதப்படுகின்றார். ஆகம முறைப்படி அமைந்த கோயில்களில் மாத்திரமன்றிச் சிறிய கொட்டில் களிலும், குளக்கட்டிலும், மரநிழலும் விந-ாயகர் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார். விவசாய, கல்வி முயற்சிகள் அனைத்தும் பிள்ளையார் வழிபாட்டுடனேயே தொடங்குகின்றன.

## சிவவழிபாடு

நாயன்மார்களால் தேவாரம் பாடப்பட்ட பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீச்சரமும் வன்னிப்பிரதேசத்திலேயே அமைந்திருக்கின்றன. மாதோட்டத்தில் வேறும் பல சிவாலயங்கள் இருந்திருக்கின்றன. மாதோட்டம் கோயில் நகரம் எனவும் அழைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பழைமை வாய்ந்த நகுலேஸ்வரத்தை விட இவ்விரு சிவாலயங்களும் நாயன்மார்களது கவனத்தை ஈர்த்துள்ளன. அடுத்த நிலையிற் பிரசித்தி பெற்ற கோயிலாகத் திகழ்வது ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயமாகும். வன்னிப்பிரதேச மக்கள் மாத்திரமன்றி யாழ்ப்பாண மாவட்ட மக்களும் இவ்வாலயத்தில் வழிபாடு செய்கின்றனர். இக்கோயிலில் அமைந்துள்ள

சுயம்புலிங்கத்திற்கு ஆவுடையார் பகுதி இல்லை. முற்காலத்தில் இக்கோயிலில் மட்டுமே நவக்கிரகங்கள் இருந்தன. தீராத நோய்களைத் தீர்ப்பதற்காக அடியார்களே நேர்த்திக் கடனுக்காக வேகாவனேஸ்வரப் பெருமானின் பின்னால் வேடுவக் கோலம் பூண்டு வேட்டைக்குச் செல்லும் வழக்கம் உண்டு.

பல சிவாலயங்களின் வழிபாடுகள் வன்னிப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. உருத்திரபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம் சதுர ஆவுடையாரை உடையது. இதேபோன்றதொரு சிவலிங்கம் வவுனிக்குளத்தில் கண்ணெடுக்கப்பட்டது. உருத்திரபுரத்திலும், வவுனிக்குளத்திலும் சிவாலயங்கள் மீளக் கட்டப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவில் பழைய சிவாலயம் ஒன்றின் வழிபாடுகள் காணப்படுகின்றன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவன் கோவில் ஒன்று செட்டிக்குளத்தில் உண்டு.

வவுனியா மாவட்டத்திலுள்ள இரணை இலுப்பைக்குளத்தில் சிவன் கோவில் ஒன்று உண்டு. கொட்டியாபுரப் பற்றில் மகாவலி கங்கைக் கரையோரமாகத் திருக்கரைசையம்பதி எனச் சிறப்புற்று விளங்குகின்ற சிவஸ்தலம் ஒன்று உண்டு. அங்குள்ள சிவலிங்கம் அகத்தியர் ஸ்தாபனம் என அழைக்கப்படுகின்றது. அண்மையில் வவுனியா கோயிற்கு குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டஸ்வரர் ஆலயம் பிரசித்தி பெற்று வருகிறது.

## அம்மன் வழிபாடு

பத்தினித் தெய்வம், முத்துமாரியம்மன், மாரியம்மன், சப்தகன்னியர் பத்திரகாளி என்னும் பல்வேறு ரூபங்களில் அம்மன் வழிபாடு வன்னியில் இடம் பெறுவதைக் காணலாம். வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயம் குறிப்பிடக் கூடிய முக்கியத்துவம் உடையது. நாவலர் எதிர்ப்பினால் யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகை அம்மன் கோயில்கள் இராஜராஜேஸ்வரி அம்மன் மனோன்மணி அம்மன் கோயில்களாக மாற்றம் பெற்றுவிட்டன. பத்தினித் தெய்வ வழிபாட்டில் ஆழமான நம்பிக்கையுடைய அடியார்கள் ஆண்டு தோறும் வற்றாப்பளையில் நடைபெறும் பொங்கலின் போது யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அம்பாளின் அருளைப் பெறுவர். கால்நடையாகக் கதிர்காமம் செல்வோரும் கண்ணகை அம்மன் பொங்கலைத் தரிசித்த பின்னரே யாத்திரையை மேற்கொள்வர். கண்ணகை அம்மனே கால்நடை யாத்திரிகர்களுக்கு வழிகாட்டிச் செல்வதாக ஐதிகம் உண்டு. கண்ணோய், அம்மை, பொக்கிளிப்பான், சின்னமுத்து போன்ற வெப்பு நோய்களைத் தீர்க்கும் தெய்வமாகக் கண்ணகை அம்மன் கருதப்படுகின்றார்.

திரிகோணமலையிலும் கண்ணகையம்மன் கோயில்கள் உண்டு. கந்தளாய் வீதியில் பாலம் போட்டார் பத்தினி அம்மன் கோயிலும் சாம்பல் தீவில் சல்லி அம்மன் கோயிலும் குறிப்பிடத்தக்கவை. வவுனியாவிற் கிடாச்சூரி அம்மனும், குஞ்சுக்குளத்து அம்மனும் பிரசித்தமானவை.

மடுமாதா கோயில் முன்பு கண்ணகை அம்மன் கோயிலாகவே இருந்தது எனக் கருதப்படுகின்றது. இப்பொழுதும் இவ்வால யத்திற்குப் பெருந்திரளான சைவமக்களும் வழிபாட்டிற்காகச் செல்வது இவ்வுண்மையை நிரூபிக்கின்றது. முத்து மாரியம்மன், காத்தவராயன் வழிபாடும் வன்னிப் பிரதேசத்தில் இடம் பெறுகின்றது. பழைய சப்தகன்னியர் ஆலய வழிபாடுகள் மன்னகண்டல் என்னும் இடத்தில் காணப்படுகின்றன. முல்லைத்தீவு வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலயம் பிரசித்தி பெற்றது.

## கந்தபுராண கலாச்சாரம்

யாழ்ப்பாணத்தின் கந்தபுராண கலாச்சாரம் வன்னிப்பிரதேசத்திலும் சிறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கந்தபுராண படனம் வன்னியிலுள்ள பெரும்பாலான கந்தசாமி கோயில்களில் இடம் பெறுகின்றது. குமாரபுரம் சித்திரவேலயுதர் ஆலயம், வெருகல்

சித்திரவேலாயுதர் ஆலயங்கள் மிகவும் பழைமையானவை.

ஐயனார் வழிபாடு

வன்னி நாட்டின் காவல் தெய்வம் ஐயனாராகும். மக்கள் வனவிலங்குகளிலிருந்து தம்மைக் காப்பதற்காக ஐயனாரையே நம்புவர். சடவன் குளத்து ஐயன் கோவிலில் நடைபெறும் பொங்கல் விழாவும் பலியிடுதலும் சிறப்பான நிகழ்ச்சிகளாகும். காடுகளுக்கூடாக மக்கள் பிரயாணம் செய்யும்போது யானை அல்லது காடி எதிர்ப்பட்டால் ஐயனே, என உரத்துச் சத்தமிட்டால் அவை அகன்றுவிடும். வன்னியின் பலபாகங்களிலும் ஐயனுக்கு ஆலய முண்டு.

நாகதம்பிரான்

இலங்கையின் ஆதிக்குடிகளாக இயக்கர், நாகர் என்னும் இரு இனமக்கள் வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. நாகவழிபாடுடைய தமிழ் மக்களே நாகர் என அழைக்கப்பட்டனர் என ஆய்வாளர் கருதுவர். மதவு வைத்த குளத்திலும், குருந்தூர்க் குளத்திலும் ஐந்து தலை நாகதம்பிரான் கோயில்களின் வழிபாடுகள் காணப்படுகின்றன. வன்னியில் பிரசித்தமான நாகதம்பிரான் கோயிலாகத் திகழ்வது புதூர் நாகதம்பிரான் ஆலயமாகும். ஆலயத்தின் அருகிலிருக்கும் புற்றிலிருந்து எடுக்கப்படும் மண் 'புதூர் மருந்து' என அழைக்கப்படுகின்றது. விஷம் தீண்டியவர்களுக்கு இதனைக் கரைத்துக் கடிவாயில் பூசுவதுடன் குடிக்கவும் கொடுத்தால் விஷம் இறங்கிவிடும். புளியம் பொக்கணை நாகதம்பிரானும் பிரசித்தமானது. இவற்றைத் தவிர வேறும்பல நாகதம்பிரான் கோயில்கள் வன்னியில் உண்டு.

சிறு தெய்வ வழிபாடு

வன்னிப் பிரதேசமக்கள் ஆகம முறையில் அமைக்கப்பட்ட பெருந்தெய்வங்களைவிட சிறுதெய்வ வழிபாட்டிலேயே அதிகம் நம்பிக்கையுடையவராய் இருக்கின்றனர். இவைகள் மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கின்றன. வன்னியில் தெய்வம், அண்ணமார் என்னும் தெய்வங்கள் விவசாய வாழ்க்கையுடன் தொடர்புடையன. விவசாயத்திற்கு மாடுகள் பேருதவியாக இருக்கின்றன. உழவு மாடுகளைக் கட்டிவைக்கும் வழக்கம் வன்னியில் இல்லை. உழவு முடிந்ததும் அவற்றை அவிழ்த்து விட்டு விடுவார்கள். சிலசமயங்களில் அவை காணாமற் போய்விடும். வன்னித் தெய்வத்திற்கு நேர்த்தி வைத்தால் மாடுகள் திரும்பக் கிடைக்கும். வன்னித் தெய்வத்திற்கெனப் பிரத்தியேகக் கோயில் இல்லை. காட்டினுள் எவ்விடத்திலேனும் பொங்கலாம். அண்ணமார், காணாமற் போன கால்நடைகளைச் சாய்த்து விடுவார் என்ற நம்பிக்கையுண்டு. விவசாயம் செய்து சூடிடித்தபின்னர் பத்திரகாளிக்கு மடைபோடும் வழக்கமும் உண்டு. திருகோணமலையிலும் வவுனியாவிலும் பெரிய பத்திரகாளியம்மன் கோயில்கள் உண்டு.

*தொகுத்துக் கூறுமிடத்தில் வன்னிப்பிரதேசத்தில்,*

1. வரலாற்றுக் காலத்திற்கு முன்பே சிவவழிபாடு சிறந்தோங்கியிருந்தது.
2. விநாயகர், பத்திரகாளி என்னும் தெய்வங்கள் விவசாய மக்களின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையன.
3. ஐயனாரும், நாகதம்பிரானும் முல்லை நில மக்களுக்கு மிகவும் முக்கியமான தெய்வங்கள்.
4. கிராமியத் தெய்வங்களின் மீதுள்ள நம்பிக்கை – கண்ணகை அம்மன், முத்துமாரி அம்மன் வன்னிப்பிரதேசத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது.
5. கந்தபுராண கலாச்சாரத்தின் பாதிப்பு வன்னிப்பிரதேசத்தில் சிறிதளவே இடம் பெற்றுள்ளது.
6. மக்களின் வாழ்க்கை முறைகள், இலட்சியங்கள், தேவைகள், மனப்பாங்குகள் என்பவற்றுக் கேற்ப வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன.
7. வன்னிப் பிரதேசத்தின் புவியியல் தன்மை அப்பிரதேச மக்களின் வழிபாட்டு மரபிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ✪

## முதலாம் சைவ வினாவிடை

# விபூதி இயல்

1. சிவபெருமானை வழிபடுஞ் சமயத்துக்குப் பெயர் யாது ?
சைவ சமயம்.
2. சைவ சமயிகள் சரீரத்திலே அவசியமாகத் தரிக்க வேண்டிய அடையாளம் யாது?
விபூதி.
3. விபூதி ஆவது யாது ?
பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகுவது திருநீறு.
4. எந்த நிற விபூதி தரிக்கத்தக்கது ?
வெள்ளை நிற விபூதி.
5. விபூதியை எதில் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும் ?
பட்டுப் பையிலேனும், சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்.
6. விபூதியை எந்தத் திக்குமுகமாக இருந்து கொண்டு தரித்தல் வேண்டும் ?
வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்.
7. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும் ?
நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து, "சிவ சிவ" என்று சொல்லி, வலக் கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.
8. விபூதி நிலத்திலே சிந்தினால் யாது செய்தல் வேண்டும் ?
சிந்திய விபூதியை எடுத்துவிட்டு, அந்த இடத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.
9. நடந்து கொண்டு ஆயினும் கிடந்து கொண்டு ஆயினும் விபூதி தரிக்கலாமா ?
தரிக்கல் ஆகாது.
10. எக்காலங்களிலே விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும் ?
நித்திரை செய்யப் புகும்போதும், நித்திரை விட்டெழுந்த உடனும், தந்தசுத்தி செய்த உடனும், சூரியன் உதிக்கும் போதும் அத்தமிக்கும்போதும், ஸ்நானஞ்செய்த உடனும், போசனத்துக்குப் போகும் போதும், போசனஞ்செய்த பின்னும் விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.
11. ஆச்சாரியார் ஆயினும் சிவனடியார் ஆயினும் விபூதி தந்தால் எப்படி வாங்கல் வேண்டும் ?
மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கல் வேண்டும்.
12. விபூதி வாங்கித் தரித்துக்கொண்ட பின் யாது செய்தல் வேண்டும் ?
முன்போல மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.
13. சுவாமி முன்னும், குரு முன்னும், சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும் ?
முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும்.
14. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும் ?
உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும். (திரிபுண்டம் – மூன்று குறி.)
15. திரிபுண்டரந் தரிக்கத்தக்க தானங்கள் யாவை ?
சிரம், நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறங்கள் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம். இவற்றுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வதும் உண்டு. முழங்கைகளையும் மணிக் கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு.
16. திரிபுண்டரந் தரிக்கும் இடத்து, நெற்றியில் எவ்வளவு நீளத் தரித்தல் வேண்டும் ?
இரண்டு கடைப்புருவ எல்லை வரையுந்தரித்தல் வேண்டும். அதிற் கூடினாலுங் குறைந்தாலுங் குற்றமாம்.
17. மார்பிலும் புயங்களிலும் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும் ?
ஆறு அங்குல நீளந் தரித்தல் வேண்டும்.
18. மற்றைத் தானங்களில் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும் ?
ஒவ்வொர் அங்குல நீளந் தரித்தல் வேண்டும்.
19. மூன்று குறிகளின் இடைவெளி எவ்வளவினதாய் இருத்தல் வேண்டும் ?
ஒவ்வொர் அங்குல அளவினதாய் இருத்தல் வேண்டும். ஒன்றை ஒன்று தீண்டல் ஆகாது.

\- ஆறுமுகநாவலர் -

★ திரிகரணம் : மனம், வாக்கு, காயம். ★

# திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்

## திருமுறை I

திருக்கோலக்கா பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 1.

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. 2.

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 3.

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. 4.

மயிலார் சாயன் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. 5.

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. 6.

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே. 7.

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே 8.

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. 9.

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10.

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. 11.

திருச்சிற்றம்பலம்

## திருப்புள்ளிருக்குவேளூர் பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளாந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. 1.

தையலா ளொருபாகஞ் சடைமேலா ளவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோ ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய் சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. 2.

வாசநலஞ் செய்திமையோர் நாடோறு மலர்தூவ
ஈசனெம் பெருமானா ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே 3.

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த வெரியாடி யுறையுமிடம்
ஆகாயந் தேரோடும் மிராவணனை யமரின் கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 4.

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 5.

திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரா னமருமிடம்
மறங் கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 6.

அத்தியினீ ருரிமூடி யழகாக வனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்றை வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே. 7.

பண்ணொன்ற விசைபாடு மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்க மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 8.

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்ன வகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 9.

கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவரெம் பெருமானார் தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காய்ப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே 10.

செடியாய வுடறீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன் சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையா மறுபிறப்பே. 11.

திருச்சிற்றம்பலம்

# திருமுறை 3

## பொது

பஞ்சாக்கரத்திருப்பதிகம் பண் -காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே. 1.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. 2.

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 3.

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 4.

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5.

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. 6.

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன வஞ்செ ழுத்துமே. 7.

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம ளிப்பன வஞ்செ ழுத்துமே. 8.

கார்வண னான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே 9.

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க் டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. 10.

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையீ சைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. 11.

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்

## திருமுறை 4

திருவதிகை வீராட்டானம் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த் திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 1.

பூண்டதோர் கேழ லெயிறும் பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கதிர் போலவெண் ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்தகட் டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 2.

ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துவங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 3.

மடமான் மறிபொற்கலையு மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமா றழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர் நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 4.

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 5.

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினென் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள ரறியப்ப டாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 6.

கொலைவரி வேங்கை யதளுங் குலவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பு மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 7.

ஆடல் புரிந்த நிலையு மரையி லசைத்த வரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்து நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 8.

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 9.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னென்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 10.

திருச்சிற்றம்பலம்

# திருமுறை 5

கோயில் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே. 1.

அரும்பற் றப்பட வாய்மலர் கொண்டுநீர்
கரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2.

அரிச்சுற் றவினை யாலடரப் புண்டு நீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனந்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3.

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொண்டன்றா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4.

ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி யிருப்பனென் னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே. 5.

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6.

ஒருத்த னாருல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே. 7.

விண்ணி றைந்ததொர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த விருவர்க் கறிவொணாக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத்
துண்ணி றைந்துநின் றாடு மொருவனே. 8.

வில்லைவட் டப்பட வாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதின் மூன்றுடன் மாய்த்தவன்
றில்லைவட் டத்திசை கைதொழு வார்வினை
லலைவடட் டங்கடந் தோடுத லுண்மையே. 9.

நாடி நாரண னான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே. 10.

மதுர வாய்மொழி மங்கையொர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
அதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11.

திருச்சிற்றம்பலம்

## திருமுறை 6

திருவதிகை வீரட்டானம் திருவடித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
யருமறையான் சென்னிக் கணியா மடி
சரவணத்தான் கைதொழு சாரும் மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணா மடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும் மடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானந்தெஞ் செல்வன் னடி . 1.

கொடுவினையா ரென்றுங் குறுகா வடி
குறைந்தடைந்தா ராழாமைக் காக்கும் மடி
படுமுழவம் பாணி பயிற்றும் மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும் மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தா னடி
நிறைகெடில வீரட்ட நீங்கா வடி. 2.

வைதெழுவார் காமம்பொய் போகா வடி
வஞ்சவலைப் பாடொன் றில்லா வடி
கைதொழுது நாமேந்திக் காணும் மடி
கணக்கு வழக்கைக் கடந்த வடி
நெய்தொழுது நாமேத்தி யாட்டும் மடி
நீள்விசும்பை யூடறுத்து நின்ற வடி
தெய்வப் புனற்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 3.

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் மடி
யழகெழுத லாகா வருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த வடி
சோமனையுங் காலனையுங் காய்ந்த வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல வடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 4.

ஒருகாலத் தொன்றாகி நின்ற வடி
யூழிதோ றூழி யுயர்ந்த வடி
பொருகழலும் பல்சிலம்பும் மார்க்கும் மடி
புகவார் புகழ்தகைய வல்ல வடி
இருநிலத்தா ரின்புற்றங் கேத்தும் மடி
யின்புற்றா ரிட்டபூ வேறும் மடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 5.

திருமகட்குச் செந்தா மரையா மடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற வடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல வடி
உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வா வடி
யுருவென் றுணரப் படாத வடி
திருவதிகைத் தென்கெடில நாடன் னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 6.

உரைமாலை யெல்லா முடைய வடி
யுரையா லுணரப் படாத வடி
வரைமாதை வாடாமை வைக்கும் மடி
வானவர்க டாம்வணங்கி வாழ்த்தும் மடி
அரைமாத் திரையி லடங்கும் மடி
யகல மளக்கிற்பா ரில்லா வடி
கரைமாங் கலிக்கெடில நாடன் னடி
கமழ்வீரட் டானக்கா பாலி யடி. 7.

நறுமலராய் நாறு மலர்ச்சே வடி
நடுவா யுலக நாடாய வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற வடி
தீத்திரளா யுள்ளே திகழ்ந்த வடி
மறுமதியை மாசு கழுவும் மடி
மந்திரமுந் தந்திரமு மாய வடி
செறிகெடில நாடர் பெருமா னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி. 8.

அணியனவுஞ் சேயனவு மல்லா வடி
யடியார்கட் காரமுத மாய வடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல வடி
பற்றற்றார் பற்றும் பவள வடி
மணியடி பொன்னடி மாண்பா மடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல வடி
தணிபாடு தண்கெடில நாடன் னடி
தகைசார் வீரட்டத் தலைவன் னடி. 9.

அந்தா மரைப்போ தலர்ந்த வடி
யரக்கனையு மாற்ற லழித்த வடி
முந்தாகி முன்னே முளைத்த வடி
முழங்கழலாய் நீண்டவெம் மூர்த்தி யடி
பந்தாடு மெல்விரலாள் பாகன் னடி
பவளத் தடவரையே போல்வா னடி
வெந்தார் சுடலைநீ றாடும் மடி
வீரட்டங் காதல் விமலன் னடி. 10.

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

## திருமுறை 7

திருக்கோளிலி — பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீளநினைந்தடி யேனுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாளவள்வாடி வருந்தாமே
கோளிலியெம்பெரு மான்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெரு மானவையட்டித் தரப்பணியே. 1.

வண்டமருங்குழ லாளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புர மூன்றெரிசெய்தவெம் வேதியனே
தெண்டிரை நீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவ னேயவையட்டித் தரப்பணியே. 2.

பாதியொர் பெண்ணைவைத் தாய்படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர் நல்லார்வருத் தமதுநீயும் றிதியன்றே
கோதில்பொழில்புடை சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆதியேயற்புத னேயவையட்டித் தரப்பணியே. 3.

சொல்லுவதென்னுனை நான்றொண்டைவாயுமை நங்கையைநீ
புல்கியிடத்தில்வைத் தாய்க்கொரு பூசல்செய் தாருளரோ
கொல்லைவளம்புற விற்குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே. 4.

முல்லைமுறுவ லுமையொருபங்குடை முக்கணனே
பல்லயர்வெண்டலை யிற்பலிகொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புற விற்றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே. 5.

குரமருங்குழ லாளுமை நங்கையொர் பங்குடையாய்
பரவைபசிவருத் தமது நீயும் றிதியன்றே
குரவமரும்பொழில் சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவமசைத்தவ னேயவையட்டித் தரப்பணியே. 6.

எம்பெருமானுனை யேநினைந்தேத்துவ னெப்பொழுதும்
வம்பமருங்குழ லாளொருபாக மமர்ந்தவனே
செம்பொனின் மாளிகை சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அன்பதுவாயடி யேற்கவையட்டித் தரப்பணியே. 7.

அரக்கன் முடிகரங் களடர்த்திட்ட வெம் மாதிப்பிரான்
பரக்குமரவல்கு லாள்பரவையவள் வாடுகின்றாள்
குரக்கினங்கள்குதி கொள்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கமதாயடி யேற்வையட்டித் தரப்பணியே. 8.

பண்டையமால்பிர மன்பறந்தும்மிடந் தும்மயர்ந்தும்
கண்டிலராயவர் கள்கழல்காண்பரி தாயபிரான்
தெண்டிரைநீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவனே யவையட்டித் தரப்பணியே. 9.

கொல்லைவளம்புற விற்றிருக்கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பர வந்திருநாவல வூரனவன்
நெல்லிடவாட்கள் வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகி னண்டர்னுல காள்பவரே. 10.

திருச்சிற்றம்பலம்

# மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகம்

திருமுறை 8

தில்லையிலருளியது

கோயில் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. 2.

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சு டரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 3.

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 4.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. 5.

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தரஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 6.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. 7.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதி. 8

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிங் கொண்டாய்
யான் இதற் கிலன்ஓர்கைம் மாறே. 10.

திருச்சிற்றம்பலம்

## காலையில் எழுக - பெற்றோரைத் தொழுக

வைகறையாமம் துயில்எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

விடியற் காலைப் பொழுதில் விழித்தெழுந்து, தான் அன்று செய்ய வேண்டிய நல்லறப் பணிகளையும், உயர்ந்த பொருள் பற்றியும் எண்ணி ஆராய்ந்து, தவறாது தாய் தந்தையைத் தொழுது எழ வேண்டும் என்பதே நம் முன்னோர் கண்ட வாழ்க்கை முறையாகும். நன்றி : ஆசாரக் கோவை

# பூந்துருத்தி நம்பி காட நம்பி திருவிசைப்பா

திருமுறை 9

கோயில்

பண் -சாளரபாணி

திருச்சிற்றம்பலம்

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 1

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர்என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே. 2

அல்லியம் பூம்பழனத்(து) ஆமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே ! தென்தில்லைக்
கொல்லை விடையேறி ! கூத்தா (டு) அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. 3

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்(டு) எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும்ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே. 4

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி ! மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே. 5

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிட(ம்) நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே. 6

களகமணி மாடம் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை ஆங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே. 7

பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம்நின் ஆடரங்கே. 8

உருவத் (து) எரியுருவாய் ஊழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்(து)
அரவிக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 9

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து பூந்துருத்திக்
காடன் தமிழ்மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே. 10

திருச்சிற்றம்பலம்

## சேந்தனார் திருப்பல்லாண்டு

திருமுறை 9

கோயில் பண் - பஞ்சமம்

*திருச்சிற்றம்பலம்*

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித் (து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக் (கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 1.

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர் !
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரன்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. 2.

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்ப என் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே. 3.

*திருச்சிற்றம்பலம்*

## திருமூலர் திருமந்திரம்

திருமுறை 10

திருச்சிற்றம்பலம்

*சிவ சிவ என்றே தெளிகிலர் ஊமர்*
*சிவ சிவ வாயுவுந் தோர்ந்துள் அடங்கச்.*
*சிவ சிவ வாய தெளிவினுள் ளார்கள்*
*சிவ சிவ வாகுந் திருவரு ளாமே.*

*சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்*
*சிவ சிவ என்றிடத் தீவினை மாளுஞ்*
*சிவ சிவ என்றிடத் தேவரு மாவார்*
*சிவ சிவ என்னச் சிவகதி தானே.*

*நமவென்று நாமத்தை நாவில் ஒடுக்கிச்*
*சிவவென்று நாமத்தைச் சிந்தையு ளேற்றப்*
*பவமது தீரும் பரிசும தற்றால்*
*அவமதி தீரும் அறும் பிறப் பன்றோ.*

*திருச்சிற்றம்பலம்*

## காரைக்காலம்மையார் பாடியது

### திருமுறை 11

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

எட்டியிலவ மீகைசூரை காரைபடர்ந்த தெங்கும்
சுட்டசு டலை சூழ்ந்தகள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டில் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளிபாடக் குழக னாடும் 1.

குண்டை வயிறறுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டுபடர்ந்த விருள் சூழ்மயானத் தெரிவா யெயிற்றுப்போய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்ட மிளிர்ந்த சடைகடாழ விமல னாடுமே 10.

சூடுமதியஞ் சடைமே லுடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடுமரவ மரையிலார்த்த வடிக ளருளாலே
காடுமலிந்த கனல்வாயெயிற்றுக் காரைக்காற் பேய்தன்
பாடல் பததும் பாடியாடப் பாவ நாசமே. 11.

திருச்சிற்றம்பலம்

## சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம்

### திருமுறை 12

திருச்சிற்றம்பலம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி! போற்றி!!

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!!

சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய்! போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி" என்ன.

திருச்சிற்றம்பலம்

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 1 | 14.04.99 | புதன் | பிரமாதி வருஷப்பிறப்பு விஷு புண்ணிய காலம் பகல் 1.32 வரை |
| | 2 | 15.04.99 | வியாழன் | அமாவாசை விரதம் |
| | 4 | 17.04.99 | சனி | சித்திரைப் பரணி, சிறுத்தொண்டர் குருபூசை |
| | 5 | 18.04.99 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| | 6 | 19.04.99 | திங்கள் | சதுர்த்தி விரதம், மங்கையர்க்கரசியார் குருபூசை |
| | 7 | 20.04.99 | செய்வாய் | விறண் மிண்டர் குருபூசை |
| | 8 | 21.04.99 | புதன் | ஷஷ்டி விரதம் |
| | 13 | 26.04.99 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| | 14 | 27.04.99 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 15 | 28.04.99 | புதன் | உமாபதி சிவாசாரியார் குருபூசை |
| | 16 | 29.04.99 | வியாழன் | சித்திரைச் சித்திரை, இசை ஞானியார் குருபூசை |
| | 17 | 30.04.99 | வெள்ளி | சித்திராப் பூரணை விரதம் சித்திர குப்தவிரதம் அர்த்த நாரீசுர விரதம், திருக்குறிப்புத் தொண்டர் குருபூசை. |
| | 21 | 04.05.99 | செவ்வாய் | சங்கட ஹர சதுர்த்தி விரதம், |
| | 25 | 08.05.99 | சனி | நடேசரபிஷேகம், அக்கினி நாள் ஆரம்பம் |
| | 26 | 09.05.99 | ஞாயிறு | திருநாவுக்கரசர் குருபூசை |
| | 28 | 11.05.99 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| | 30 | 13.05.99 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 31 | 14.05.99 | வெள்ளி | விஷ்ணுபதி புண்ணிய காலம் இரவு 1.09 முதல் |

# நினைவிற் கொள்வதற்கு


| | | | | |
|---|---|---|---|---|
| வைகாசி | 1 | 15.05.99 | சனி | மாதப் பிறப்பு விஷ்ணுபதி புண்ணிய காலம் காலை 7.33 வரை, கார்த்திகை விரதம், அமாவாசை விரதம் |
| | 4 | 18.05.99 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 6 | 20.05.99 | வியாழன் | ஷஷ்டி விரதம் நமிநந்தி அடிகள் குருபூசை, சேக்கிழார் குருபூசை |
| | 7 | 21.05.99 | வெள்ளி | சோமாசி மாறர் குருபூசை |
| | 11 | 25.05.99 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| | 13 | 27.05.99 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 14 | 28.05.99 | வெள்ளி | அக்கினி நாள் முடிவு |
| | 15 | 29.05.99 | சனி | பூரணை விரதம், வைகாசி விசாகம் |
| | 17 | 31.05.99 | திங்கள் | திருஞான சம்பந்தர் குருபூசை, திருமூல நக்கர் குருபூசை, முருகர் குருபூசை, திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை |
| | 20 | 03.06.99 | வியாழன் | சங்கட ஹர சதுர்த்தி விரதம் |
| | 27 | 10.06.99 | வியாழன் | ஏகாதசி விரதம், கழற்சிங்கர் குருபூசை |
| | 28 | 11.06.99 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| | 29 | 12.06.99 | சனி | கார்த்திகை விரதம், |
| | 30 | 13.06.99 | ஞாயிறு | அமாவாசை விரதம் |





வவுனியாவில்

'சைவநீதி' அறிமுக

விழா











'சைவம்' பற்றி வவுனியாவில் நடைபெற்ற ஆசிரியர், மாணவர்களுக்கான கருத்தரங்கின் சில காட்சிகள்.









கொட்டாஞ்சேனை இராமநாதன் வீதியிலுறையும்

அருள்மிகு வீரமாகாளி அம்பாள்

தேவஸ்தான

1999.04.22 மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள்

**Reg. No. QD/37/ News 99.** இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் **48B**, புளூமெண்டோல் வீதி, கொழும்பு – 13 என்னும் முகவரியிலுள்ள யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1999. 05. 02 இல் வெளியிடப்பட்டது.